ஓம்
விநாயகநம

UNIVERSITY OF JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
PERIODICALS DIVISION

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 காலயுத்திவருஷம் பங்குனிமாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை [6-௪-1979] சுடர் 4

# சைவத்தில் உயர்வு தாழ்வு இல்லை. யாவரிடத்தும் வஞ்சகமற்ற அன்பே தலை.

சிவநெறியின் உண்மை விளக்கமே சைவம் எனப்படுவது. சைவத்தின் மெய்த் திருவாவது திருநீறு உருத்திராக்கம் இவையாகும். இவற்றை அணிந்து உள்ளும் புறம்பும தூய்மையான ஒருமைப்பாடே சைவ வாழ்வின் சிறப்பாகும். இதனை முதலாகக் கொண்டு அதன் மேலாக ஏனைய செயல்கள் பேணிடப்படவுள்ளன.

திருநீறு அணிந்தார் யாவரும் சிவநெறியாளர். இதனை நீறு அணிபவன் சிவன் என்றதாகும். சிவன் அருளுக்கு உரியவர்தான் திரு நீறு அணியும் பாக்கியம் பெறுவார். ஏனையோரால் அது கூடாது என சமய நூல்களில் வலி உறுத்தி பெரியோர் மொழிந்துள்ளனர்.

இதனாலே இக் கருத்தை வைத்துப் பெரிய புராணத்து சேக்கிழார் என் சொல்லுகின்றார் என நாம் ஆராயப் புகுந்தால் சைவ நெறிப் புண்ணியரை செம்மைவெண்நீற்று ஒருமையினர் எனச் சொல்லி விட்டு சைவமெய்த்திருவின் சார்பே அடியார்க்கு மேலான பொருளாவது என்கின்றார்.

சைவமெய்த்திரு என்றால் யாது? சைவத்திரு எனப் பொதுப் படையாகச் சொல்லாது சைவமெய்த்திரு என சொல்லியதனால் சைவத்தில் உண்மை வலி உறுத்தப்பட்டு சைவநெறியின் புனிதம் விளக்கப்பட்டது. இவைதான் திருநீறு உருத்திராக்கம் அணிதல் பூ நீர் விளக்குடன் பூசை புரிதல் தோத்திரம் செய்தல் என்பன.

ஆதலின் திரு நீறு அணிதல் உருத்திராக்கம் அணிதல் உண்மைக்குரிய வழியாக அமைய வேண்டும். திருநீறு உருத்திராக்கத்தின் உண்மை சிவன் ஒருவனே தெய்வம் அவனன்றி ஏதும் இல்லை என்ற கருத்தேயாகும். உருத்திராக்கம் கருணைக் கண்ணீர் ஆநந்த உவகைக் கண்ணீர் இவற்றை எடுத்துக் காட்டும் உண்மைப்பொருள்

இந்த பொருள் விளக்கமெல்லாம் இன்று உதறி எறியப்பட்டு ஏதேதோ வேறு பொருள் மனதில் கொண்டு திருநீற்றின் ஒருமைப்பாட்டையும் பேரருளின் கருணையையும் புறக்கணித்து சைவத்தில் உயர்வு தாழ்வு பார்த்து சிறப்பு சிறப்பின்மை பார்த்து பட்டமளிப்புகள் நடத்துகிறார்கள்.

ஐயோ இந்தப் பாதகச் செயலால் எம் தமிழ் இனம் என்றும் இல்லாத பழியைப் பெற்றுக் கொண்டது. பிரித்தானியர் நம்நாட்டைக் கைப்பற்றியவுடன் மக்களின் ஒருமைப்பாட்டைக் குலைத்து ஒருக்காலும் ஒற்றுமையாக வாழ முடியாத படி மக்களை பிரிப்பதற்கு சுலபமாக பட்டங்களைக் கொடுத்தனர். அவரால் கௌரவிக்கப்பட்டால் பேதையும் பெரியவராயினர். இந்த நிலையில் அவர்களது புத்திக் கூர்மைக்கு நிகரில்லை. இந்த வழியை பொல்லாங்கும் கபடமும் நிறைந்த மடாதிபதிகள் கண்டு இந்தப் பட்டமளிப்பை தாமும் பார்த்து ஓகோ! நாங்களும் இந்த வழியைப் பின்பற்றினால் நமது கௌரவ உயர்வு என்றும் நிலைக்கும் என எண்ணி தம்மை யார் என எண்ணுது மக்களைப் பட்டங் கொடுத்து கௌரவித்து தமது வாழ்வை பொருளாதார ரீதியில் மேம்பாடாக வைத்துக்கொண்டனர்.

இந்த மடாதிபதிகளைப் பெரிதாகவும் மற்று திருநீறு அணிவாரைச் சிறியவராகவும் உலகம் எண்ணும் படி பட்டமளிப்பு விழாக்கள் குதூகலமாக நடைபெறுகின்றது.

மடாதிபதிகள் எதற்குப் பட்டம் கொடுத்தார்? இறைவன் சந்நிதியில் ஏற்றத்தாழ்வு காண்பிக்கவோ? அது தவறான வழி என யாவரும் உணர வேண்டும். ஒருவன் கடவுள் அருள் பெறுவதென்றால் எப்படிப் பெறலாகும்? அது அதற்குரிய வழி ஒழுகுவதால் பெறலாகும்.

பந்த பாசங்களால் மூடப்பட்டு உலையும் மக்கள் விரும்புவதை பாசங்களின் வேர் அறுக்கும் இறைவன் விரும்பமாட்டான். இதனை நாயன்மார் நன்கு தெளிவு படுத்தி உள்ளார்கள். சிவன் அருள் நிறைந்த தேவாரங்களில் யாரும் வல்லமை உடையர் என்றால் அது மதிப்பிற்குரியதே அன்றி பட்டத்திற்குரியதல்ல.

நாயன்மார் வரலாறு உணராத சில பேயர் நாயன்மார் தேவாரம் படித்து பாடுபவரையும் பேசுபவரையும் பட்டத்தால் சிறப்பித்தால் அது நாயன்மார்க்குச் செய்யும் அவமானமும திருமுறைக்குச் செய்யும் துரோகமே ஆகும். நாயன்மார் எங்காகிலும் தமது பாடலில் தம் பாட்டைப் பாடுவார்க்கு பட்டம் கொடுங்கள் எனச் சொல்லியதுண்டோ? தென்இந்தியரே காண்பிப்பீரா? யாழ்ப்பாணத்தாரே காண்பிப்பீரோ?

ஆனால் அவர்ள் தகமது பதிகங்களை ஓதுவார் உயர்வு பெறுவார் சிவலோகம் பெறுவார் என்று கூறியுள்ளனர். உயர்வு பெறுதல் சிவலோகம் பெறுதல் இவற்றை தீர்க்கும் தகுதி ஆருக்கு உண்டு அதனை உணருங்கள். அடியார் உளம் அறிபவன் சிவன் அன்றி வேறு யார் உணரமுடியும்? ஓதி உணர்ந்து ஓங்கி நிற்கும் நிலையை ஒவ்வொருவரும் தாமாக உணரலாமே அன்றி பிறர் அதை உணரமுடியாது.

பேச்சு இனிமையால் சைவத்தில் உயர்வு தாழ்வு காணமுடியாது. ஒழுக்கம் பத்திமை அன்பு இவற்றால் ஒருவர் உயரலாம் பேச்சு வல்லமை பாட்டு வல்லமை சைவத்தில் உயர்வு அன்று. அருள் நெறி தான் உயர்வு. ஆகவே நீண்ட காலமாக எமது தமிழினம் சிறுமைச் செய்கைகளான பட்டமளிப்பு திருவிழா மேடை உயர்வு தாழ்வு ஆன பெரும் பாதகங்களை கோவிலில் புரிந்து பல பழிகளைப் பெருக்கி பெரும் அநீதியை விளைவித்துக் கொண்டது. அதனாலே நாட்டில் பிரிவினை பெருகுகின்றது மக்கள் நலன்கள் கெடுகின்றன. அன்பு தயை தவம் தியானம் செபம் இவையாவும் கைவிடப்பட்டு கொடுஞ்செயலான வஞ்சனை வீம்பு பொறாமை புகழ் விருப்பம் இறுமாப்பு இவை மிகுந்து கொண்டது. இந்த நிலையில் எம்பெருமான் திருநாவுக்கரசர் அன்றொருநாள் கன்றாப்பூர் என்னும் சிவதலத்து கடவுளை வணங்கிடப் போவார் அங்கு உறையும் பெருமானை இன்ன இன்ன வகை ஒழுக்கமுடைய மக்கள் உள்ளத்தும் காணலாகும் எனச் சொல்கின்றார்.

பலரும் சைவநெறி என்றால் ஒரு கோவிலில் தேர் கட்டுவது திருவிழாச் செய்வது பிரசங்கம் வைப்பது பாட்டுக்கச்சேரி வைப்பது கூத்து வைப்பது இப்படியான வகை நடத்தல் என நினைப்பார்கள். சைவம் என்றால் என்ன என்பது ஆருக்கும் விளங்காமல் இருக்கின்றது என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. ஏன் என்றால் சைவம் என்றால் கோவிலில் திருவிழாச் செய்தல் என்றதோடு மட்டும் அமையவில்லை. இன்னமும் வாழ்க்கையே நெறியுடன் அமைய வேண்டும். அப்பொழுது தான் கடவுள் கிருபை நமக்கு கிடைக்கும்.

கடவுள் எங்கே காட்டுவீரோ எனசர்வகலாசாலை மாணவர்பலர் கேட்கலாம். ஆனால் திருநாவுக்கரசர் இப்படி இப்படி நடப்பாரிடத்து கடவுளைக் காணலாம் என்கின்றார். அப்படி அப்படி நடப்பாரைக் காண்பது எங்கே? வஞ்சகம் அற்று அன்பு கூர்ந்த மனிதரை காண்பது எங்கே? காலை மத்தியானம் மாலை பூ நீர் கொண்டு போற்றுவாரைக் காண்பது எங்கே? விடிந்ததும் தோய்த்த வெள்ளை ஆடை உடுத்து வெண்ணீறு அணிந்து இறைவனைத் தோத்திரம் செய்வாரைக் காண்பது எங்கே? திருநீறு அணிவாரிடத்து உயர்வு தாழ்வு பாராது; சத்துரு மித்துரு என எண்ணாது அன்பினால் அவரை உவந்து நோக்குவாரைக் காண்பது எங்கே? ஆட்களுக்கு தக்க மாதிரி தாளம் போடாமல் உள்ளத் தூய்மையுடன் வணங்கும் போதும் உள்ளன்புடன் வணங்குவாரைக் காண்பது எங்கே? யாவர்க்குமே பிச்சை இடுவாரைக் காண்பது எங்கே ஐந்து புலன்களையும் அகத்து அடக்கி வென்ற புண்ணியரைக் காண்பது எங்கே? கடும் பசியில் உண்ணப்போகும்போது பிறர் வந்து இரந்தால் அந்த உணவை அப்படியே கொடுத்து உதவுவாரைக் காண்பது எங்கே? சிவனை நினைந்தவுடன் கசிந்து கண்ணீர் விட்டு மெய் அரும்பும் அடியவரைக் காண்பது எங்கே? சிவனைத் தியானத்தில் கருத்தோடு கருத்தாக உள்ளவரைக் காண்பது எங்கே? அருளின் சிறப்பால் பல உயிர்க்கும் இரங்கும் புனிதரைக் காண்பது எங்கே? தன் இடத்து உள்ளதை அப்படியே பிறர்க்கு கொடுத்து தான் மகிழ்வுடன் இருக்க வல்லாரைக் காண்பது எங்கே? இவர்களை எந்த சர்வகலாசாலையிலோ எந்த நகரத்திலோ காட்டவல்லீரோ? அப்படியானவர் இடத்து நிச்சயமாக கடவுள் இருக்கிறார். காணலாம் அவரைக் காணவே கடவுள் உண்டோ இல்லையோ என எண்ணும் சந்தேகம் இன்றி உம்மிடம் கடவுள் உண்டு என எண்ணிடும் காதன்மை மிகும். சைவம் என்றால் இவைதான் இப்படியான நிதானமான வாழ்வு தான் சைவம் இப்படியான ஒரு சைவரைக் காட்டுவாயோ என யோகசுவாமி என் முன் வைத்து ஓர் அன்பரைக் கேட்டது. இவை தான் மேன்மையான சைவ நீதிகள்.

இன்றைய மனிதன் விஞ்ஞான வளர்ச்சியில் மேம்பட்டான் அதை நாம் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த விஞ்ஞான வளர்ச்சி அஞ்ஞானத்தைப் பெருக்கி மனிதனை உண்மைப் பொருள் அதாவது நித்தியப் பொருளை அடையமுடியாத படி அழிவுக்கே உரித்தாய மாயப் பொருள்களில் பற்றை மிகைப்படுத்த வசதி செய்துவிட்டது.

கடவுள் இருக்கும் இடம் இப்படியான வாழ்வுடைய மக்களின் நெஞ்சில் என திருநாவுக்கரசர் சைவநெறியின் உயர்ந்த சீலம் பற்றி சொல்கின்றார். அதனை அப்பாடல் முழுவதிலும் காணலாகும். இதோ அவர் பாடலை உரையுடன் கீழே காண்கின்றீர்கள். அதில் அவர் என்ன வழியாக நடந்தால் திருவருள் பெறுதற்கு உரிமையாவீர்என சொல்வதைஉணருங்கள். இதை உணர்ந்துஇன்றைய சைவப்பிரமுகர்பிரசாரகர் சுவாமிகள்தம்பிரான்கள் பிராமணர் என் செய்கிறார்? இவர்களை நாம் பெரியவராக கணிக்கலாமோ? என்பதை பாரபட்சமின்றி நீங்களே தீர்மானியுங்கள். நான் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வழி பிழை என்று சொல்வது தவருய் இருந்தால் தாராள மாக நீங்கள் விதிக்கும் தண்டனையை சந்திரதீப ஆசிரியர் என்ற கோதாவில் ஏற்க தயாராகின்றேன். இது உண்மை. கபடவார்த்தை அன்று! நீதித்தலத்திற்கு போகவேண்டாம்? நான் பிழை என்றும் நான் குறைகாண்பிக்கும் மக்கள் சரி திருநாவுக்கரசர் சொல்லும் தேவாரக் கருத்தைக் கொண்டு அவர் சரியாகத்தான் நடக்கிருர் [என்று காட்டினுல் நான் நீர் விதிக்கும் தண்டனையை நிச்சயம் ஏற்பேன. சைவக் குருக்கள் மாரே உங்கள் ஆரிலும் மேற்சொல்லிய நன்நெறிகளில் சிலவேனும் உண்டா காட்டுவீரோ? நாம் உம்மைப் பற்றி எழுதியதைக் கண்டு என்னைக் குறை சொன்னீர்களாம் உங்கள் நிலையைத் தயவு செய்து சிந்தியுங்கள்.

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென் றென்று பரவி நாளும் நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே.

பெண்ணை ஓர் உடலின் கூறுக வைத்து மகிழ்ந்தவனே வேதம் ஓதும் நாவுடைய கடவுளே! பிறை சூடி! தேவர்கள் யாவர்க்கும் நாதனே என்று என்று போற்றி நாளும் மனம் நைந்து உருகி; வஞ்சகம் நீங்கி அன்பு கூர்ந்து தம் கடமையாக காலை மத்தியானம் மாலை என்னும் மூன்று காலமும் பூ நீர் இவை கொண்டு நித்தலும் மறவாது வாழ்த்தி வணங்கி காதல் உடைய வழியால் தொழுகின்ற அடியார் நெஞ்சின் உள்ளாககன்றுப்பூர் என்னும் தலத்து இருக்கும் கடவுள் சிவனைக் காணலாம்,

நடுதறி என்பது சுவாமியைக் குறித்தது. ஒரு வைணவப் பிராமணனுக்கு வாழ்க்கைப் பட்ட சைவப் பெண் ஒருத்தியின் கவலை நீக்க கடவுள் பசுக்கன்று கட்டிய தறியில் வந்து தோன்றினமையால் நடு தறி எனப்பட்டது. 1

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்று
செடி யுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும் செல்கதிக்கு வழிகாட்டுஞ்சிவனே யென்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றும் சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே.

விடிந்ததும் எழுந்து வெண்திருநீற்றை மேனியில் அணிந்து வெளுத்து நன்கு தூய்மை செய்யப்பட்ட கீள் உடையுடன் [கோவணம் என்பது] அதன் மேல் உடுக்கும் (வேட்டி) அதனை உடுத்து செடி போல் இயல்பில் பரக்கும் கொடிய வினையைத் தீர்க்கும் கடவுளே என்றும்! நாம் செல்லும் உயர்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்; உடுக்கினைப் போன்ற இடை உடைய பெண் உமை நாச்சியாரின் பங்கனே என்றும்; சுடலையில் நடமாடும் சோதி என்றும்; வாசமுடைய மலர் சொரிந்து தொழுகின்ற அடியாரகள் நெஞ்சிடத்து கன்றுப்பூர் என்னும் இத்தலத்து இருக்கும் கடவுளைக் காணலாகும்.

கீள் உடை என்பதையே நாம் கோவணம் என இங்கு சொல்வோம். கோவணம் என பாடலில் குறிப்பிட்டது வேட்டியாகும் அது நான் 4 முழம். பெரும்பாலும் முழந்தாளுக்கு மேலாகவே இதனை அணிவர். வெளுத்து அமைந்தது என்பதை வேட்டி தோய்த்து உலர்த்திய வெள்ளை ஆடை. சைவர்களாய எமக்கு வெள்ளை ஆடை தான் வேண்டியது என்றதால் வெளுத்து அமைந்த என்ருர் இதற்காகத் நான் வெள்ளாவி வைக்சல் எனவும் வருவது வழக்கமாக வந்தது எனலாகும்.

திருநீறு வெண்மையான பொழுது ஆடையும் வெண்மையாக அமைதல் நன்று. எம்பெருமானுடைய திருமேனியில் உள்ளன யாவும் வெள்ளையே வெண்சங்கின் தோடு வெண் பிறை வெள்ளை மண்டை ஒடு வெள்ளைக் கொக்கிறகு வெள்ளை இடபம் ஆகவே அடியார்க்கும் வெண்மை நலமாவது, வெள்ளைக் கில்லை கள்ளமும் கபடமும். என்பதையும் உணர்க. 2

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே.

எவராக இருப்பினும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் வறியவர் செல்வர் எனும் நிலையில் யாராக இருப்பினும் சரி ஒருவர் தாமாக தமது நெற்றியில் அணிந்த திருநீறும் உருத்திராக்கம் முதல் சிவசாதனங்கள் அணிந்திருக்கக்கண்டால் அவர் பால் விரும்பிடல் அன்றி அவரை எமக்காகாத புறநிலை உடையவர் என வெறுக்காதபடி அவர் அவரைக் கண்ட அந்தநேரத்தில் மனமகிழ்ந்து சிவனுக்கு இவர் அடிமையானர் என்னும் திறத்தை மனதில்நினைந்து அவரை மகிழ்வுடன் நோக்கி அப்படியான வேடநிலையில் அவர் ஒரு பிரசங்க சுவாமி பெரியவர் இவர் ஒரு மடாதிபதிபெரியர் அவர் பல சித்துகள் செய்யும் சுவாமி ஓர் கடவுள் என சொல்லிஉயர்வு தாழ்வு எனும் இரண்டாக பாவித்தல் நீங்கி யாவரிடத்தும் சிவனே உண்டு என்னும் தன்மையால் சிவமே கண்டு அவர் திறம் நோக்கி அவர்க்குச் செய்யும் உபசரிப்பு யாவும் சிவனுக்கெனப் பேணி நெஞ்சில் வஞ்சனையின்றித் தொழும் அடியாரிடத்து கன்றுப்பூரில் இருக்கும் கடவுளைக் கணலாம்.

விலாடம்-நெற்றி.சாதனம் உருத்திராக்கம். கவர்தல் -வஞ்சித்தல். உள்ளத்து உவப்பிலாது வெளியில் பாசாங்காகக் கும்பிடுதல் உள்ளம் ஒன்று நினைத்து வெளியில் உபசரிப்புடன் பேசல் கவர்தல் எனப்படும் ஆனமையால் கவராது என்ருர். 3

இலங்காலஞ் சொல்லாநா ளென்று நெஞ்சத் திடை யாதே யாவர்க்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்சம் உண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே.

எமக்கு காலமில்லை நாள் போயிட்டது என்று தன் நெஞ்சத்து துயரப்படாது பிச்சை கொடுத்து அணுவளவும் பிசகாது உண்மை நெறி நின்று அத்தூய ஒழுக்கத்தால் அறிவு மிகுந்து உண்மை அன்புசேர வைத்து கொண்டு பொய்யை நீக்கி; நஞ்செழுந்த அச்சத்தால் நடுங்கிய உண்மை நின்ற தேவரைக்காத்து நஞ்சம் உண்ட பெருமான் திருவடி இணைகளே அடைவேன் என்ற சித்தம் வைத்து என்நிலையிலும் கலங்கா திருக்கும் அடியார் நெஞ்சத்துள்ளே கன்றுப்பூரில் இருக்கும் கடவுள் சிவனைக் காணலாகும்,

இலங்காலம் என்பது இப்ப நேரமில்லை என. இளமையில் நினைப்பதும் செல்லா நாள் வயது போய்விட்டது என நினைப்பதைக் குறித்தது எனவும் சொல்லலாம். சிலர் நமக்கு காலமில்லை எனச் சொல்வார் சிலர் நமக்கு வயது போச்சு என்பார். ஆனல் இறைவன் அருள் பெறுவதற்கு இளமை முதுமை என்ற காலவேறுபாடு இல்லை எந்த நாளும் சிவனை அடைவதற்குரிய நாளே

அடுத்து யாவர்க்கும் பிச்சை இடும்படி சொல்கின்ருர். சிவன் அருள் பெறுதற்கு இதுவே வழி. எவர்க்கும் பிச்சை கொடுக்க வேண்டும். தாம் உண்ணமுன் வேறு அன்பர்க்கு முன் உண்ணும்படி உண்பித்து பின் உண்பது பெரும் சாதனையாவது. பெரும் யோக நிலையில் எல்லாம் இதுவே தலைசிறந்தது. தருமம் செய்வார்க்குத் தான் கடவுளிடம் அன்பு வருவது. ஏனையோர்க்கு ஒருபோதும் வராது! ஆயிரம் கோபுரம் தேர் இவை கட்டுவதிலும் பசித்தவர்க்கு உணவு கொடுத்தல் பன்மடங்கு பிரயோசனமாகும்.

கோபுரங்கட்டுவார் அதில் தனது விளம்பரத்தை பலகையிலோ கல்லிலோ பொறித்து வைக்கலாம். சவுக்காரம் பீடி சர்வத்து சினிமா தேயிலைத் தோட்டம் உப்பு புளி மிளகாய் வாய்ப்பன் பன் இரும்பு பொன் மது முதல் கம்பனி லிமிட்டெட்டுகள் வடிவாக கோபுரத்தில் மண்டபத்தில் மணிக்கூட்டில் தமது விலாசத்தை விளம்பரமாக்கலாம். ஆனல் சாப்பாடு கொடுத்தால் சாப்பிட்டவன் வயிற்றில் எழுதுவது பஞ்சி. வாரியார் தாளம் தட்டார் சிவத்தமிழ் சிறப்புரை தராது பரமாச்சாரியர் பட்டம் தரார் அந்தணர் அச்சா சொல்லார் புலவர் வித்துவான்கள் வி மதிப்பிலாப் பணி என பேசமாட்டார். பண்டிதர்கள் மணி அடியார். வீரகேசரி தினகரன் முதல் பத்திரிகைகள் சிறப்பு மலர் வெளியிடாது. கல்லூரி அதிபர் கவனம் செலுத்தார் விழா எடுக்க முடியாது ஆராச்சி மகாநாடு செய்ய இயலாது. இவ்வளவும் யாவர்க்கும் பிச்சை கொடுக்கும் செயலில் நடவாது. ஆனல் சிவன் உணர்வான் என்பது நமது தெளிவு. 4

விருத்தனே வேலைவிட முண்ட கண்டா விரிசடை மேல் வெண்திங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமைகணவா வுலக மூர்த்தி நுந்தாத வொண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே யென்றென்று புலம்பி நாளும் புலனைந்தும் அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினுல் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே யாவர்க்கும் மூத்தவனே கடல் நஞ்சம் உண்ட கண்டம் உடைய கடவுளே விரித்த சடை மீது வெண் பிறை விளங்கச் சூடிடும் ஏகனுன கடவுளே! உமையம்மை கணவா உலகங்கட்கு மூர்த்தியே அணையாத ஒளியுடைய சுடரே அடியார் தமக்கு ஏற்ற பொருத்தமாய கடவுளே என்று வாய்வந்தன புலம்பி நாளும் ஐந்து புலன்களையும் உள்ளாக அடக்கி புலன்கள் செய்யும் சேட்டைகளை ஒழிவிக்க புலம்பி அழுது உள்ளத்து உள்ளாக சிவனை நோக்கி விடாத நற்கருத்திலை தொழுகின்ற அடியார்கள் நெஞ்சின் உள்ளாக கன்ருப்பூரில் இருக்கும் கடவுளைக் காணலாகும்.

வாயினல் வந்தது சொல்லி வாழ்த்துதல் புலம்பி என்கின்ருர் குழந்தை தந்தையாரை நோக்கி புலம்பி அழுதிட தந்தை தாயர் இடத்து தானகக் கசிவு ஏற்படுகின்றது. இதே போன்று தாயினும் நல்ல சிவனை உள்ளாக நோக்கி அழுதால் அருள் பெறுவதாகும். 5

பொசியினல் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப் பொல்லாத புலாலுடம்பை நிலாசு மென்று
பசியினல் மீதூரப் பட்டே யீட்டிப் பலர்க்குதவ லதுவொழிந்து பவள வாயார்
வசியினல கப்பட்டு விழா முன்னம் வானவர்கோன் திருநாமம் அஞ்சுஞ் சொல்லிக்
கசிவினல் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

பொய்யினல் உருவாக்கப் பட்டு புழுக்கள் பொதிந்திருக்கப் பெறும் இந்த ஊன் பொருந்தும் உடம்பை என்றும் நிலவி இருக்கும் என எண்ணி பசியால் மிகவும் பெருக்கப்பட்டு தம் பசிக்கு உண்ண பல பொருளும் தேடி; தேடிய பொருளைப் பிறர்க்கு கொடுப்பதையும் விடுத்து; பவளம் போலும் வாயுடைய பெண்களின் வசீகர எழிலால் மயக்கப்பட்டு அவரிடம் அகப்பட்டு சிறிய இன்பம் நுகர்ந்து அதன் தன்மையால் இறந்து அற்றுப் போவதன் முன்பாக; தேவர்களின் கடவுளாய நாமம் அஞ்சு எழுத்தும் சொல்லி மனம் கசிந்துருகிடும் நிலையால் தொழுகின்ற அடியார் நெஞ்சத்துள்ளே கன்ருப்பூரில் இருக்கும் கடவுளைக் காணலாகும்.

பொசியினல் மிடைந்து என்பது வாய்தல் ஒன்பதுடையது உடம்பு என்றதாகும். புழுப்பொதிந்தது என்ருல் உடல் இறந்தபின் புழுக்கள் தோன்றுதலையும் இரத்தத்தில் உடலில் கிருமிகள் இருப்பதையும் உணர்த்துகின்ருர். பசியினல் மீதூரப்படுதல் என்றது ஒருக்கால் பசிக்கு திருப்தியாக உண்ட பின்னரும் சிறிது நேரத்தில் பசி எழுகின்றது இச்செயல் ஓய்வின்றிப் பெருகுதலின் மீதூரப்பட்டு என்ருர். பசிக்கு சுவையான உணவிற்காக மனிதன பல இடமும் ஓடி பொருள் தேடுகின்றன். தேடியபொருளைப் பிறர்க்கு கொடுக்க மனம் வராது. அதனுலே பிறர்க்கு உதவல் ஒழிந்து என்ருர். பெண்கள் இயல்பில் வசிகரமுடையவர். அவர்களைக் கண்டவுடன் யாராய் இருந்தாலும் விரும்பி அவர்க்கு பொருள் கொடுத்து அவர்க்கு அடிமையாகி அவர் சிற்றின்பத்து வீழ்வர் ஆனதினல் அவரை பெண்கள் வசியினல் அகப்பட்டு என்ருர். வீழாமுன்னம் என்பது பெண்கள் மேல் இச்சை கொண்டவனல் அதை விடுத்திருக்க முடியவே முடியாது. அடுத்து பெண்களும் ஓர் அடவாது இன்பத்தில் இனிது அறிந்தால் அவரை விடவே விடார். எந்நிலையாலும் அவரை தமது இன்பத்துறைக்கு ஆளாக்கியே தீர்வர். இந்த நிலையில் பெண்மயக்கில் நின்றும் நீங்க முடியாது. அடுத்து பெண் மயக்கம் தான் ஒருவனுடைய மரணத்திற்கு வித்துமாகின்றது. பெண்மயக்கை வென்றவன் காலத்தையே வெல்வான். பெண் போகம் தவிர்ந்தவனல் தான் ஓங்காரத்து உள்ளொளியை நாட முடியும். பெண் மயக்கில் மூழ்கியவன் கடவுள் அருளைப் பெற எண்ணுவது கனவின் காட்சியாகும்.

பிறருடைய மனைவியைத் தீண்டுவான் பொல்லாதவன. பிறர் மனை செல்வோனைக் காண்பதே பெரும் தோஷம் வருவிக்கும். இப்படி பெண் மயக்கம் பல அல்லல் தர நின்றது என்றதால் பவளவாயர் வசியினல் அகப்பட்டு வீழா முன்னம் எனக் கூறினர். 6

ஐயினல் மிட றடைப்புண் டாக்கை விட்டு ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினற் கண்ணெழுதி மாலை சூட்டி மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனுர்க் காளாகி அன்பு மிக்கு வகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினல் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

சளியினல் தொண்டை அடைபட்டு சடமம் இழுத்து உயிர் உடலை விட்டு போனதுப் வீட்டில் இருந்தார் கூடி மையினல் சவத்திற்கு கண் எழுதி மாலை சூடி எடுத்துச் சென்று சுடலையில் இடுவதன் முன்பாக அறிவோடு இருக்கும் நேரத்தில் இளம்பிறை சூடும் எம்பிரான் சிவனுக்கு ஆட்பட்டவராகி உள்ளம் குழைந்து அன்பு மிகுந்து உரோமம் சிலிர்த்து அருள்வசமாகி எம்பெருமான் திருப்பாதம் கைகளால் தொழுகின்ற அடியார்கள் நெஞ்சின் இடத்தாக கன்ருப்பூரில் இருக்கும் கடவுளைக் காணலாகும்.

ஐ என்பது கபம் (சளி) உடலை விட்டு உயிர் போம பொழுது ஒன்பது வாசல்களும் அடைபடும். அப்பொழுது தொண்டையில் சளி மிகும். அந்நேரம் திக்குமுக்கான நிலையில் தான் மூச்சு எழுவதைக் காணலாகும். இதனை மரண அவத்தை எனச்சொல்வார்கள். மிக மிகப்பொல்லாத வேதனை- சிலருக்கு மலம் சலம் கூட இவ்வேதனையில் ஒழுகக் காணலாகும். ஆதலின் ஐயினல் மிடறு அடைப்புண்டு என்ருர். இறந்ததும் அல்லது இறக்கும் தறுவாயிலும் மக்கள் மனைவி சுற்றம் யாவரும் கூடுவர் என்றதால் அகத்தார் கூடி என்ருர். இறந்த சவத்திற்கு மையால் கண் எழுதுவதும் மாலை சூடுவதும் மரபு. சிவனிடத்து அன்பு மிகுந்தவரிடத்து உள்ளம் குழைதலும் கண்ணீர் பெருகுதலும் உரோமம் சிலிர்த்தலும் இயல்பில் நிகழ்வன. உண்மையான வழி சிவனுக்கு தொண்டாயினர் இடத்து 10 இலட்சணங்கள் இயல்பில் காணப்படுவன அவை நினைத்து வெளியால் காட்டுவதற்கு கூத்திற்கு கோலம் போடுவது போலல்லாது இயல்பாக வரும். சிவன்பால் மெய்யன்பு உடையவர்க்கு பத்து இலட்சணமும் வரும். இதனை பத்துஆகிய தொண்டர் பயில் பாலாவியின் கரை என்கின்ருர் எம்பிரானுர் சுந்தரர். 7

திருதிமையால் ஐவரையுங் காவ லேவித் திகையாதே சிவாயநம என்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக் கடல்நீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவ நாசா பரஞ்சுடரே யென் றென்று பரவி நாளுங்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

மன வைராக்கியத்தால் ஐந்து புலன்களை தத்தம் இச்சை வழி போகாதபடி அடக்கி காவலாக்கி புலன் அடக்கிய வகையால் வரும் சுழற்சியில் திகைப்பிலாதவராகி எத்தீங்கினையும் கடந்திட சிவாய நம என்ற நிலையில் சிந்தையில் மிக்க மந்திரத்தை ஓதி சஞ்சலம் அறுத்து துன்பமாகப் பெருகிடும் வெள்ளமாய பெருங்கடல் நீந்திக் கரையில் அப்பால் சேர்கின்ற கருத்தே மிகுந்து அதனுலே நாள்தோறும் எம்பெருமானை சூரியனைப் பல் பிடுங்கிய பாவங்களை நாசம் செய்பவனே காண்டற்கரிய ஒளியே என்று போற்றி மிகவும் தொழுகின்ற அடியார்கள் நெஞ்சத்து உள்ளாக கன்ருப்பூரில் இருக்கும் கடவுளைக் காணக்கூடியதாக இருக்கும்.

புலன்களாய கண் மூக்கு செவி நா இவை என்றென்றும் தத்தமது இச்சையின் இசைவிற்கே இயங்குவாராதலின் அவரை அடக்க வேண்டுமென்றமைக்க காவல் செய்து என்ருர். துயரை நீக்கி கவலை எனும் கடல் நீந்திட இலகுவில் உற்றது சிவாயநம என்னும் மந்திரம். 8

குனிந்தசிலை யாற்புரமூன் றெரித்தாய் என்றும் கூற்றுதைத்த குரைகழற்சே வடியாய் என்றும்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தாய் என்றும் தசக்கிரிவன் மலையெடுக்க விரலா லூன்றி
முனிந்தவன்தன் சிரம்பத்துந் தாழுந் தோளும் முரணழித்திட் டருள்கொடுத்தமூர்த்தியென்றும்
கனிந்துமிகத் தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் கணலாமே.

வளைத்த வில்லால் மூன்று அசுரரது புரங்களையும் எரித்தாய் என்றும்; இயமனை உதைத்த சிலம்பின் ஒலி அலம்பும் சேவடி உடைய பகவானே என்றும்; அருச்சுனனிற்கு பாசுபதப் படை கொடுத்தாய் என்றும் பத்துமுடியுடைய இராவணன் கைலைமலையை எடுத்திட திருப்பாத விரலால் ஊன்றி முனிந்து அவனது பத்துத் தலையும் காலும் தோளும் கொண்ட வலியை அழித்து பின்னர் இரங்கி அருள் கொடுத்த சிவமூர்த்தி என்றும் உள்ளம் கனிந்து மிகவும் தொழுகின்ற அடியார்கள் நெஞ்சிடத்தாக கன்ருப்பூரில் இருக்கும் கடவுள் சிவனைக் காணலாகும்.

கனிந்து தொழுதல் தான் இங்கு முக்கியமாகக் கருதுகிறர். கனிந்து தொழுவார் காசுக்காகத் தொழார். காசுக்காகத் தொழுவார் ஒருபோதும் கனியமாட்டார். பட்டம் பெறுவார் புகழ் விரும்புவார் இவர் யாவரும் ஒருபோதும் கனியமாட்டார் இதனை மக்கள் உணர வேண்டும். இன்று நாம் உலகிற்கு உண்மையை எடுத்துச் சொல்கின்றோம். புகழும் பெருமையும் பெற்றுக் கொண்டு பணம் ஈட்டி செல்வாக்கைப் பெருக்கும் பிராமணர் பாட்டுக்காரர் பிரசங்கக்காரரான யாவரும் தம்மைப் பின்பற்றுவோரையும் உய்யச் செய்யார் அன்றி தாமும் உய்யமாட்டார். பலரும் சந்திர தீப ஆசிரியர் கண்டபாட்டில் எழுதுகிறர் இது ஒரு பயித்தியம் என எண்ணலாம் சொல்லியும் கொள்ளலாம். ஆனல் இந்த ஏமாற்றுப் பேர்வழிகளின் பொய்கள் கொஞ்சக் காலத்திற்குத் தான் நிலைக்கும்.

அழகுடைய பெண் ஒருத்தியின் வசீகரம் அவள் முதிர்ந்தால் இராது. அற்றுப்போம். பின்னர் கிழவியை ஒருவரும் விரும்பார். ஆனல் இளம்பருவத்தில் யாவரும் அணைய விரும்புவார். அதே போன்று இந்நறைய பிரசாரகருடைய பொய்மைகள் நீடித்த காலம வரை நிலவாது. ஆனல் சந்திர தீபம் காட்டும் தெய்வத் தன்மை உடைய நீதிகள் என்றும் குன்று இள நலமுடைய தாய் தெய்வ மணம் கமழ்ந்து ஊழி தோறும் உயர்ந்து நிலவும். 9-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமயம் சொல்லும் சீலங்களில் சைவ சமய சீலமே தலையானது.

குருநாதன் சொன்ன சீலத்தை உணர்ந்து ஒழுகுவார் காலத்தை வென்று இருப்பார்.

இப்படியாக எம்பிரான் அருணகிரியார் சொல்கின்றார். சீலம் என்பது தான் சைவ ஒழுக்கம். உலகில் உள்ள சமயங்களில் அன்புமயம் என்னும் உண்மைப் பொருளைப் போதிப்பது எமது சைவம் ஒன்றே.

இன்று ஓரேஒரு சமயம் சமயப் பிரசாரம் என்ற கொள்கையில் நாட்டில் பிரிவினை வஞ்சனை ஓரவாங்கியம் இவற்றை உண்டாக்காதபடி உயர்வு தாழ்வு என்ற தன்மையிலாதவாறு இருப்பதென்றால் அது சைவம் ஒன்றே தான்.

இதென்ன நீர் இப்படிச் சொல்லுகின்றீர் உங்கள் பிராமணர் மடாதிபதி கள் பிரசங்கியர் பண்டிதர்கள் வித்துவான்கள் என்செய்கிறார் என என் னைக் கேட்டால் அதற்காகத்தான் எமது பத்திரிகை மூலம் நீர் சொல்லும் இவர்கள் சைவர்கள் என்று சொல்லமுடியாது என அவர்களது தவறான நடத் தைகளை சைவத்தின் மூல நிலையான அன்புமயத்தினை விடுத்து அநியாயமான பாவப்போக்குகளைப் பெருக்கிடும் நிலைகளைச் சுட்டிக்காணபித்துசைவநெறியில் இவர் நடந்திடும் தன்மைகள் போன்ற செயல் இல்லை எனச் சொல்லவேண்டி வந்தது காரணமாக உள்ளது.

சைவத்தில் சொல்லிலும் பிரசாரத்திலும் ஒழுக்கமும் சீலமும் தான் பெரிது. சீலம் இல்லாதவன் சிவனை அறியான் என பெரியோர் உறுதி சொல்லி உள்ளனர். இதனை நம் மக்கள் உணர வேண்டும்.

இன்று சைவ நெறியில் சீல மில்லாத வேடதாரிகள் பெருவாரி உண்டு. வேடம் வியாபார நோக்குடன் போடப்பட்டதன்றி சீலத்தின் பிரதிபலிப் பாக இல்லை. சிவன.. யார் இலட்சணம் பத்து எனவும் அப்பத்தும் சிவன்பால் கொள்ளும் அன்பினால் தாமாக விளைவன எனவும் சொல்லப்படுவது. இதனை பத்து ஆகியதொண்டர் பயில் பாலாவியின் கரைமேல் செத்தார் எலும்பு அணி யும் திருக்கேதீச்சரப் பெருமான் என சுந்தரா தம் தேவாரத்து மொழிகின் றார். பத்து ஆவது வேறு. பத்து போடுறதுவேறு. ஆகவே இவை சீலம்உடையன வாகும் பொருள் என இயல்பின் கொள்ளுதல் அன்றி கோவிலுக்கு மேடைக்கு மட்டும் குறிவைப்பது வேடம் போடுவது இவை யாவும் வியாபாரநோக்கமே. அந்த உள்ளம் தம்மைப்பறர் அறியச் செய்த கோலமே அன்றி இறைவன அன்பினால் விளைந்த தல்ல. அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்த மாய் கசிந்து உருக என்பரம் (வசம்) அல்லாத இன்னருள் தந்தாய் என்கின் றார் மணிவாசகர். இவை சிவசம்பந்தத்தின் விளைவாக வந்தன என மணிவாச கர் பேசகிறார். இவையும் 'இவைபோன்ற ஏனையவும் இறைவன் அருளால் உள்ளப் பூரிப்பில் வேடமாக விளைவது தான் பத்து ஆவது என்பதாகும்.

சிவன் சீலத்தின் வடிவாக உளன் என்று நாயன்மார் சொல்கின்றனர்: ''சீலமே ஆலவாயில் சிவபெருமானே'' ''சீலம் தான் பெரிதும் உகப்பவன் சிவன்'' என்று பலவார்த்தைகளால் உரைலாகும். ஆதலின் சீலம் உடைய வர் இயல்பில் சிவசம்பந்த முடையவராகின்றார். இப்படியானவர் சிவன் அருளிற்கு இலக்காகி காலத்தை வெல்வார்கள். ஆனால் சீலம் என்றால் என்னவாகும் என்பது கேள்வியாகலாம்; சைவ சீலங்கள் பல உண்டு. எனி னும் திருநாவுக்கரசர் சைவ சீலங்களைப் பற்றிமேலே சில குறிப்புகள் தருகின் றார். அவரது பாடலை நன்கு அவதானித்தால் அவை அவை புலப்படும். இவை யன்றி வேறு சில ஒழுக்கமும் வேண்டப்படுவன. நாவுக்கரசர் கொள்கையின் படி முதற்கண் ஒருவரூிடம் வஞ்சகம் அற்றிட வேண்டும். ஒருதர்க்கொரு மாதிரியும் இன்மொருதர்க்கொருமாதிரி நடத்தல் வஞ்சனைஎன்பது. திரு நீறு அணிவாரிடத்து உயர்வு தாழ்வற்ற அன்பு மயமான நிலைகாணப்படவேண்டும். தனது பெரும் கடமையாக காலை மத்தியானம் மாலை இவ்வேளை மூன்றும் பூவும் நீரும் கொண்டு எம்பிரானைப் போற்றி செய்யவேண்டும்: ஏதாகிலும் ஒரு குறியை சிவன் என எண்ணி நீர் அதற்கு முப்பொழுதும் பூ நீர் கொண்டு நித்தலும் மறவாது போற்றுங்கள் என்கின்றார்.

இந்ததேவாரப் பதிகத்து பாடப் பெற்ற தலத்தின் வரலாற்றை நோக்கு வோமேயானால் இந்த நிலை நன்கு புலப்படும். இவர் இப்பாடலைப் பாடிய தலம் கன்றாப்பூர் எனப்படும். அதாவது கன்று கட்டிய தறி (கட்டை) யில் சுவாமி தோன்றி வரம் அருளியவர். இதன் வரலாற்றை உணரப் போனால் ஓர்சைவப் பெண்ணை ஓர் வைணவப் பிராமணர் திருமணம் செய்கின்றார். அப்பெண்ணை அழைத்து தன்இல்லம் சேர்கின்றார். வைஷ்ணவர்கள் சிவபத்த ரைக்காணச் சகியாதவர்கள். ஆதலின் வைஷ்ணவர் இல்லத்துச் சென்ற பெண் கற்புடைய உத்தமி ஆகையினால் தன் கணவன் சொற்படி திரு நீறு அணிதல் முதலியன செய்ய முடியாது விடுகின்றாள். ஆனால் சிவன் இடம் கொண்ட அன்பு அதனை விடமுடியாது ஆதலின் தனது நிலையைப் பிறர் அறி யாதபடி பசுவின் கன்றுகட்டிய தறியைசிவன்எனக்கொண்டு நாள்தோறுமவழி பட்டு வந்தாள் அவள்அன்பிற்கு எளிமையாகி எம்பிரான் அக்கன்று கட்டிய தறியில் தோன்றினார். அவளுக்கு அனுக்கிரகம் புரிந்தார். இதுவே பின்னர் கன்றாப் பூர் என்னும் தலமாகவிளங்கியது.

இதன் உண்மையை நாம் உணர்வோமேயானால் வஞ்சனை அற்ற வழி பாடு நிச்சயம் சிவதரிசனை பெறவைத்திடும், அந்தவஞ்சனை அற்ற வாழ்விற் காகவே உயர்வு தாழ்வு பாராதே எல்லாருக்கும் பிச்சை கொடு கனிந்த மன த்துடன் நீவாழ் என்று இன்னவகை பல சிறப்புக்கள் சொல்கின்றார்.

இவையன்றி நெறியை விட்டு விலகாத்த என்கின்றார். இது மிகவும் முக் கியமாவது. உலகில் இனிய கண்டம் இருந்தால் இனியபாட்டைப் பாடிப் பிறர்க்குப் போதிக்கலாம். இனியகண்டம் இல்லாதவர் என் செய்யலாம்? ஆகவே இனிய கண்டமுடன் பாடிப் போதிபபதிலும் தாம் நீதியாக நடத் தலால் தனககும் உயர்வைப் பெற்று தன்குலததிற்கும் சிறப்பைத்தேடித்தர லாம்.

சீல மில்லாதவரின் போதனை கேட்போர் எவர்க்கும்பிரயோசனம் தராது: பதில் துன்பமே பெருகும். எத்தனை எத்தனை விலாசமுடையவர்கள் இறந் தொழிந்தனர்; வெறும் கர்மிகளாகி இறந்தனர்: இவரைப் பின்பற்றினோரும் பெரும் துயரத்தில் பின்னர் அலைந்த வரலாறுகள் உண்டு. பெருமளவு பொருள் சம்பாரித்து பிறர்க்கும் கொடாமல் தேடி புதைத்து திருடன் கொண்டு போகக் கண்டு பொருள் வாஞ்சையால் கவலை மிகுந்து இறந்தவர் பலர் உளர்;

ஒருவர்க்கு திருமணம் என்றால் ஒன்றுதான்; ஆணாயினும் பெண்ஆயினும் திருமணம் ஒன்றே தான்; அது சரிவராதபோது அதை மறந்திருத்தலே நலம் ஒருதாரம் குழம்பிய பின் மறுதாரம் செய்வது ஓர் சைவனுக்கு உகந்ததல்ல இந்த பெண் ஆசை மரணத்திற்கு வித்தாவது என்றதால் பெண்கள் வசியினால் அகப்பட்டு வீழா முன்னம் என அப்பாடலில் சொல்வதைக் காணுங்கள் வீழ்தல் என்பது மரணத்தைக் குறித்தது. பெண்சொற் கேட்டு நடப்பவ யாரும் கர்மியே! ஆன்ம பெலனை ஒருவருக்கு இல்லாமல் செய்வது பெ மயக்கம், அதுவுமல்லாது பொய்சொல் லல், தன் நெறி தவறி நடத்தல் இவை யாகும் ஆன்ம பெலம் பெறுவார் நீக்கவேண்டும்.

பூவும் நீரும் கொண்டு போற்றி சிற்றின்ப விடயங்களில் விழாது உண்மை வழியான அன்புமயம் மரணத்தை நீக்கும். இதற்கு மார்க்கண்டேயர் வரலாறு சாட்சி!

# கோயில் வில்லிசையில் சந்திரதீப ஆசிரியரை யமன் எனக் கேலி செய்தனர்

இன்று சந்திர தீபம் ஆசிரியர் தான் இவ்வுலகில் இயமன் போல் இருக் கிறார் என்று நாயன்மார் கட்டைச் சேர்ந்த சாம்பசிவ ஐயரின் புதல்வர் ஒருவர் மானிப்பாய் அரசடி விநாயகர் ஆலயத்தில் ஓர் திருவிழாவில் வில் இசைநிகழ்தும் போதுதெரிவித்தாராம். சத்தியவான் சாவித்திரிசரித்திரத்தை வில்இசை நிகழ்த்தும் போது தான் இந்த வரலாற்றை மேற்படி ஐயர்சொ ன்னாராம்: அப்படிச் சொல்லிடும் போது இந்த இயமனுக்கு என்ன செய்ய வேண்டும் 'என்ற போது நல்லூர் வடக்கு வீதியில் வைத்து சுடுதண்ணி ஊத்த வேண்டும் மென்றும் கூறினாராம். இப்படியாக உங்களைப் பற்றி கூறுகி ன்றது அந்தணர் குலம் என்றார் இதைக் கேட்டு நின்ற இன்னுமொரு அந்தணர். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் நம்மை அறியாது நம்மன தில் சில சிந்தனைகள் தோன்றியது. இவற்றை திருவருளின் செயலாகவே நான் நினைக்க வேண்டி வந்தது. ஏன் எனில் கோவில் சந்நிதானத்தில் எமது தொண்டு இயமனுக்கு ஒப்பாயது என்றபோது இயமன் என்பவன் யார் என சிந்தித்தேன்.

தூக்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வியின் தாசமிண்டர்கள் தெல்லிப்பழை யில் வைத்து நம்மைத் துன்புறுத்தியது அது மன அழுக்கு. அது நாங்கள் பெரிய ஆட்கள் எங்களது கோவிலைப் பற்றி இவன் என்ன எழுதுவது என்ற மீடுக்கின் தன்மை. ஆனால் இந்த வில் இசையின் கேலிப்பாடு வெருளித் தனத்தில் தெய்வீக நிலை காட்டுகிறது.

அன்று மிண்டரின் கொடுமையில் நின்றும் காப்பாற்றப்பட்டது. இன்று வெருளித்தன மூலம் உலகிற்கு உண்மை புலப்படுத்தப்படு கின்றது.

இயமன் என்றவன் யார் என்றதே கேள்வி. இயமனைத் தருமன் என் றும் அறக்கடவுள் என்றும் நடுவன் என்றும் சொல்வார்கள். நீதி தருமம் இரண்டிற்கும் ஒரே கடவுள் அவனே என வேதங்கள் சொல்லும். உலகி காலமுடிவைச் செய்பவன் இயமன் என்றமையால் அவனைக் கொடியவன் என்று சொல்வார்கள். ஆனால் அந்த காலமுடிவு சிவன் அருளால் பெற்றது ஆகவே அவன் செய்வதும் சிவதொண்டு. உலகில் படைப்பு காப்பு என்னு இரு தொழிலும் இயமனின் அழிப்பு இன்றி இயங்கமுடியாது.

உலகில் ஒவ்வொரு உயிரும் செய்யும் நல்வினை தீவினையின் படி அவரவ ர்க்கு உற்றபயனைத் தருவிப்பவன் இயமன் என நீதிநூல்கள் சொல்லும். ஆதலின் அவனை அறக்கடவுள் எனச் சொல்வார். உலகில் தருமத்தை நிலை நாட்டுபவன் அவன் ஒருவனே. அவன் தனது தண்டனையின்மூலம் உயிர்செய் யும். பாதகங்களைப் போக்கி பழியை நீக்கி உயிர்களை நல்நிலைப் படுத்துபவன். தனது தண்டனை மூலம் தான் உயிர்களை திருவருள் வழிக்கு மாற்றுபவன். இதனை இயமனைக் கொண்டு தண்டித்து தூய்மை செய்து சிவன் தன் அடிக் கீழ்வைப்பன் என சித்தாந்த சாத்திரம் சொல்லும்.

அவனை இயமதருமராசன் எனச் சொல்வார். தெய்வங்களில் அவன் ஒருவன் தான் நல்லவர் தீயவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் செல்வர் வறி யவர் என வித்தியாசம் காணாதவன். அவனது கண்பார்வை உயிர்களை நோக்கும் போது குருடுமாதிரியான தன்மையில் அந்தகன் கண்ணில்லாதவன் என்று சொல்வார்கள். அத்தகைய நிலையால் நீதி தருமம் இரணடிற்கும் ஏதும் தீங்கு எக்காலமும் வருவியாவகை பாதுகாப்பவன் இயமன்ஒருவனே!

அத்தகைய அறக்கடவுள் தண்டனை செய்வதால் கொடியவன் எனக் கருதப்படினும் அவனால் இவ்வுலகிற்கு ஓர் பெரும் உபதேச நூல் அருள் செய்யப்பட்டது. அந்த நூல்யாது எனின் கதாஉபநிஷத் தென்றதாகும். உண்மைப் பொருள் விளக்கம் என்றே சொல்லலாம். [illegible] என்ற பிராமணச் சிறுவனுக்காக அருள் செய்யப்பட்டது.

உபநிஷத் என்பது சத்தின் வழி வந்ததுஎன்பதாகும். சத் என்பது பிறப்பு இறப்பு யாவும் கடந்த உண்மைப் பொருள்; இதனை பிரமம் என்பார்கள். இதன் வழியை பிரம வித்தை என்பார்கள். இதனின்றும் பிராமணர் என்னும் சொல் பிரமவித்தைக்குரியவர் என வந்தது. ஆத லின் பிரமத்தை உணரத் தலைப்படும் யாவரும் பிராமணரே.

இயமனால் உபதேசிக்கப்பட்ட கதாஉபநிஷத் பிரம்ம உணர்ச்சியை ஏற் படுத்துவதாக உள்ளது. வேதாந்தக் கொள்கைப்படி பாச பந்தங்களின் நின்றும் விடுதலையையும் அழிவற்ற நித்தியப் பேற்றையும் பெற வகைசெய் வது. இதனைப்பற்றிய வராலாற்றுக் கதை ஒன்று உளது.

முன்னர்க்காலத்து வைஸ்ரவாச என்னும் ரிஷி இருந்தார்: அவர்க்கு நாச்சிகேதன் என்னும் ஓர் இளம் புதல்வன் இருந்தான். இளம்பருவத்தே இப்பிள்ளை உண்மைப் பொருளை அறியும் தாகம் மிகுந்தவராய் தூயஒழுக்கம் உடையவராய் இருந்தார். வைஸ்ரவாச ஓர் யாகம் செய்தார். அந்தயாகத் தில் தன்னிடத்தில் உள்ள பொருள் யாவற்றையும் தானமாகக் கொடுக்க வேண்டிய விதி உண்டு. வைஸ்ரவாச இத்தானத்தில் தன்னிடம் உள் பொருளைக் கொடுக்கும் போது சிறிது கபடம் செய்தார். தன்னிடம் உள் பொருளை தானமாக ஏற்க வந்த அந்தணர்க்கும் குருமார்க்கும் தன்னி டத்துள்ள நல்ல பசுக்களைக் கொடாமல் நோயும் கிழடுமான பசுவையே தான மாகக் கொடுத்தார். நாச்சிகேதன் தந்தையின் இச்செயலைக் கண்டான். தந் தையாரின் இச்செயல் யாகம் செய்யும் பலனைக் கொடுக்காது என அஞ் ஞன். அத்துடன் நீர் உண்ணமுடியாத சாப்பிடமுடியாத பால் கொடாத கன்று ஈணமுடியாத பசுக்களைத் தானமாகக் கொடுப்பவர் இன்பம் தரும் உலகிற்கு செல்லாது நித்திய துயரமும் துன்பமும் தரும் உலகிற்கே செல் வார் என எண்ணினான். ஆதலில் இதனால் தந்தைக்கு வரக்கூடிய பழியினை நீக்க எண்ணினான்: அதனாலே தந்தையை நோக்கி ''தந்தையே'' யானும் உமது பொருளாகும். இந்தயாகத்து உம்மிடத்து உள்ள பொருள் யாவற் றையும் கொடுக்கின்றீர். ந்ஆதலால் என்னையும் கொடும்'' என்றான். வைஸ்ர வாச என்னும் தந்தை அதற்கு மனம் கொள்ளவில்லை. ஆதலில் பேசாது இருந்தார். மகன் விட்டபாடில்லை. தன்னைக் கொடுக்கும் படியும் தன்னை யார்க்குக் கொடுக்கப் போவதாக சொல்லும்படியும் திரும்ப திரும்பக் கேட் டான். தந்தையின் பழி நீக்கும் படி கேட்ட உத்தம பிள்ளை மேல் தந்தைக்கு கோபம் பிறந்தது. உடன் மகனை நோக்கி ''நாச்சிகேதனே உன்னை இயமனுக்கு கொடுத்தேன்'' எனத் தந்தை நாச்சிகேதனிடம் கூறினார். தந்தை சொல்லை அப்படியே பணிவுடன் ஏற்றுக் கொண்டான்.

நாச்சிகேதன் தந்தையின் சொல்லை ஏற்று இயமனது உலகம் புகுந் தான். ஆனால் இயமன் அந்நேரம் அங்கு இல்லை. மூன்று நாட்கள் கழித்தே இயமன் அங்கு வந்தார். தனக்காக இப்பிராமணப் பிள்ளை காத்திருந்ததை உணர்ந்தார். அதில் ஒருவரைக் காத்திருப்ப வைப்பது தவறுவது என இயமன் எண்ணி அதற்கு பிரீதியாக நாச்சிகேதனை விரும்பிய மூன்று வரம் கேட்கும் படி சொன்னார். அது கேட்ட நாச்சி கேதன் இயமனை நோக்கி கடவுளே! என் தந்தையார் என் மீது கொண்ட கோபத்தையும் நான் அவரைப் பிரிய வேண்டி வந்தமை யால் அவர்க்கு உற்ற கவலையும் தீரும்படி ஒரு வரம் வேண்டும், அடுத்து நான் பிரம உலகத்தை அடைந்து தீர்க்க ஆயுளுடன் நோய் பிணி மூப்பு துன்பம் அச்சம் இன்றி வாழ வரம் தரல் வேண்டும் என வரம் வேண்டினார். இவை இருவரத்தையும் இயமதேவன் கொடுத் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்ருவது வரம் கேட்கும் வேளை நாச்சிகேதன் தன் மனதில் மனிதனிடத்து அவன் உடம்புடன் சேர இறவாது அப்பாலாக நித்தியப் பொருள் ஒன்று உண்டோ என அறிய விரும்பினுன். இப்பொருள் தான் யாது என இயமதேவனிடம் கேட்டறிய விரும்பினுன்: ஆதலினுல் இயமனை நோக்கி அழிவற்றதாய் என்றும் உள்ளதாக பிறப்பு இறப்பு கடந்ததாக மனிதனிடத்து உள்ள பொருள் யாது? அதை அறியக் கூறிடும் என மூன்ருவது வரமாக வேண்டினுன்.

இதைக் கேட்ட இயமதேவன் இது பிரம்ம உபதேசம் ஆவதால் முதற் கண் இந்த நிலையில் நாச்சிகேதன் பரிபக்குவ நிலையில் உள்ளானே என சோதித்திட எண்ணி நாச்சிகேதனை இதனை விடுத்து வேறு வரங்கள் பல தருவதாகக் கூறினுன். நாச்சிகேதனிடம் வேறு வேறு பொருள் மேல் இச்சை கொள்ளும்படி தூண்டி வேறு வேறு போகங்களைப் பெறும் வரம் தர ஆயத்தமாக உளன் என்ருர், வேறு வேறு உலகசாம்பிராச்சியங்கள் தேவ உலக சாம்பிராச்சியங்கள் யாவற்றையும் பெற வரம் தருவதாகவும் சந்ததிப் பெருக்கம் முதல் இசை கலை முதலிய பல பேறுகள் தருவதாகவும் சொல்லிப் பார்த்தார். ஆனுல் நாச்சிகேதன் அவை எவையுமே விரும்பவில்லை. உடம்பில் உள்ள ஆன்ம நித்தியத்தின் ரகசியத்தை உணர்த்தற்குரிய மன அமைதியும் உடையவனுய் வேறு எந்த ஆசையும் அற்ற தூயனுய் விளங்கிடக் கண்டு கொண்டபின இயமதேவன் நச்சிகேதனுக்கு இந்த அழிவற்ற ஆன்ம உணர்ச்சி என்னும் பிரம்ம வித்தையை போதிக்கின்ருர். இதுவே கதா உபநிஷத் எனப் பேரிடப் படுவது. அது பொய்யைக் கடிந்து மெய்ம்மையை உணர வைப்பதாகும்.

இயமன் நாச்சிகேதனுக்கு போதித்த ஆன்மா என்பது அது தான் ஓங்கார சொரூபமாகி உலகமெலாம் கடந்து யாவும் தன்னிடத்து உதிப்பவும் மீளவும் ஒடுங்குவதுமாக உளது. ஆன்மா ஒருபோதும பிறப்பது மில்லை அழிவதுமில்லை நித்தியமாவது. ஓங்காரத்து உள்ளொளியாவது அதுவே எல்லாம் அறிகின்ற அறிவு சொரூபமாவது.

இயமன் மீண்டும் சொல்வார் இதனை அறியத்தலைப்படுவார் மனதைக் கட்டுப்படுத்தி புலன்களை அடக்கியாளப் பழகல் வேண்டும் என்ருர்.

ஆதலின் நாமும் கோயில் ஓங்காரத்து உள்ளொளியாய சிவன் இருக்கும் இடம். இங்கு பயபத்தியுடன் நீர் ஒழுகும். ஒலிபெருக்கி வேண்டாம். வில் இசை வேண்டாம். மேளம் வேண்டாம். வேதநெறிக்குரிய வகைகளையே முதற்கண்கோவிலில் புரிவோம் என்றேன்.

என் சொல்லை பேதைப் பிராமணரும் பிரசாரகரும் தங்கள் வருவாய்க்கு இடைஞ்சல் என எண்ணி கேலிசெய்கின்ருர். ஆனுல் இனியாதல் சந்திரதீபம உண்மையோ பேதைப் பிராமணியும் பிரசார வீணரும் உண்மையோ தெளியுங்கள்.

சந்திர தீப ஆசிரியர் என்ற முறையில் யான் இலங்கை நகரில் உள்ள குருமார்கள் பண்டிதர்கள் பெரியார்கள் சைவக் கோயில்கள் ஆகியவற்றை தாக்குதலை என் நோக்கமாகக் கொண்டேனே எனவும் சிலா சந்தேகிக்கலாம்? அப்படி யாரும் விளக்கக்குறைவால் சந்தேகித் திருப்பார். நமக்கு சில அந்தணர் எழுதும் கடிதத்தை கொண்டு நான் அப்படியே நினைக்கிறேன்; ஆனுல்: ஓர் பத்திரிகை சைவம் வளர்க்க எத்தனித்தால் முதற்கண் கடமையாது? அதுதான் சைவ நெறியில் நடைபெற்றுக் கொண்டுவரும் தவறுகளையும் எடுத்துக் காட்டுதல் பெரும் பணியாகும்.

ஓர் பத்திரிகை ஆசிரியர் தொழிலிலே மிகமிக கடினமானதும் வேதனை தருவதுமாவது கண்டனம் தெரிவிப்பது. மிகச்சுலபமாவது புகழ்ந்து கூறுவது: புகழ்ந்து கூறுவது இனிக்கும். தவறுகளை சுட்டிக்காட்டி நல்நெறி சொல்லிடும் போது அது கசக்கும்.

இதனுல் இனிக்கக் கூறி பிழையைக் காணாமலே விட்டவுடன் பிழை செய்வார் இன்னமும் பலபிழைகளைச் சரிஎனச் செய்து செய்து முடிவில் தனக்கும் சமூகத்திற்கும் பெரும் அழிவைத் தேடுகிருர். நான் இதை என் கட்சிசார்பில் சொல்ல வில்லை. வேதங்கள் ஆகமங்கள் வழிவந்த ஸ்மிருதிகள் இவை தெரிவிப்பன: வேதநெறிக்குரிய பிராமணன் வில்விசைக்குரியவனுக பேதைத் தொழில் புரிபவனுகக் கீழ்மைப் படுகின்ற போது அவனைநீவீர் பிழைசெய்வீர் எனவும் பிரசாரகர்பிழை செய்தால் அவற்றைச்சுட்டிக்காண்பித்தல்குருநிந்தை யாகும் என்ற கூத்து நம் நாட்டில் நிலவியது. பிராமணர் விடும் பிழைகளை பிரசாரகர் செய்யும் பிழைகளை வழிபடப்போவோர் செய்யும் அநியாயங்களை சுட்டிக்காட்டுதல் ஒருபோதும் நிந்தையாகாது. ஒருவர் தன் நடத்தையால் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய பாவ விருத்தி நின்றும் காத்தல் நிந்தை அல்ல. இதை நம் மக்கள் உணர வேண்டும்.

ஆனுல் நன்மை சொல்வாரை நீதியை எடுத்து விளக்கி தருமத்தை நிலநாட்ட முற்படுவாரை நிந்தித்து அடிக்து அவர் தொண்டை இடைஞ்சல் படவைப்பதுதான் துரோகம். உண்மையில் சாம்பசிவ ஐயரின் புதல்வர் வில் இசையாளரும் நெல்லிப்பழை தூர்காதுரந்தரியின் தொண்டர் படையும் செய்தது வேதநிந்தனை குருநிந்தனைக்குரிய தோஷத்தை வருவிக்கும். இதை இன்று மக்கள் அவர்கட்கு உற்ற இன்றைய நிலையில் உணர முடியாவிட்டாலும் காலம் இதை பின்னுல் உணரக் காட்டும். வேதத்தில் சொல்லிய கர்மத்தத்துவம் ஒருபோதும் தவருகாது. கலியுகத்தில் பலியாது என்று போகாது. மக்களே நாம் சொல்வதை நம்பி இருந்து பாருங்கள்.

மாணிக்கவாசகர் நமக்கு ஓர் நல்லவார்த்தை சொல்லியுள்ளார். அது தான் நாடவர் பழித்துரை பூணது வாக என்றதாகும். அடுத்து திருநாவுக்கரசர் நிலையும் சிவனடியார்க்கு நன்மையாகச் சிறக்கும் என்கின்ருர். நான் ஓர் அடியவராகக்கருதப்படுவதற்கு எட்டுணையேனும் தகுதி அற்றேனுயினு நான் அடியார்கள் திருவடி பரவும் உண்மை உத்தமர் பாதம்தொழுபவன். ஆதலால் எமது பணியில் தோஷமுடைய நிலை எக்காலமும் ஏற்படாது. இது இன்றல்ல காலகதியில் உணரப்படும். இயமன் உபதேசித்த கதாஉபநிஷத்தின் நற்கருத்துக்கள் இனிவெளியாகும் தீபத்தில் தரப்படவுள்ளன.

ஆத்மா எல்லாருடைய உள்ளத்திலும் உண்டு. அதுவே மிக மிக மூலப் பொருளாவது. அதுவே மனம் சக்தி உடல் இவையாவற்றுக்கும் காரணமாக உளது. அது எக்காலமும் எதனுலும் மாற்றம் அடைவதில்லை. அதுவே உண்மைப் பொருளாவது இப்படி பல இரகசியங்கள் இயமன் சொல்லி நாம் சொல்வது போல் நாச்சிகேதனுக்கு உபதேசம் செய்வார். உண்மைப் பொருளை உணர உபதேசிப்பார் கிரியைகளைச் செய்வாரிடத்து உண்மையில்லையேல் அவர் உபதேசத்தால் பயனில்லை கிரியையால் பலனில்லை என்றவகை எத்தனையோ உபதேசம் நாச்சிகேதனுக்கு மொழிகின்ருர். இதன் அருமையான கருத்துக்களை கதா உபநிஷத்தில் காண்க. என்னுல் கூடுமானவரை இந்த சுலோகங்கள்சிலவற்றின் தமிழாக்கத்தை அடுத்தஅடுத்த தீபத்தில் காண்பிக்கின்றேன்.

# பிராமணர் பூநூலுக்குரிய ஒழுக்கம் கெட்டால் பூநூலை களைதல் நன்று

எமது சைவ நெறியில் அந்தணர்கள் உயர்ந்தவர்கள்: ஏன் உயர்ந்தவர்கள் என்ருல் தாம் செய்யும் தொழிலால் உயர்ந்தவர்கள்: என்ன தொழில் எனில் அதுதான் காலை உச்சி மாலை எனும் முப்பொழுதும் தாம் இறைவனுக்கு செய்யும் வழிபாடு முதற் சிறப்புக்களால் உயர்ந்தவர். அடுத்து ஏனைய உலகத்தவர் இதனை செய்ய தாம் உதவியாய் இருப்பவர். ஏனைய மக்கள் வேதங்களை அறியார்கள் உண்மைகளை உணரார்கள் ஆதலினுல் உணராதமக்களிடம் அன்பு கூர்ந்து அவர்களை ஈடேற்ற கிரியைகளை அவர்க்காகச் செய்தலால் அந்தணர்கள் ஆசாரியர்கள் வணக்கத்திற் குரியராகின்ருர். இதனுல் அந்தணர்க்கு ஆறு தொழில் விதிக்கப்பட்டது. வேதம் ஓதல் ஓதுவித்தல் யாகம் செய்தல் செய்வித்தல் தன்னிடம் உள்ளதை பொருள் இல்லாத அதிதிகட்கு கொடுத்தல் இவையன்றி தனது வேதநெறி ஒழுக்கங்கட்கு பொருள் பிறரிடம் பெறுதல் இவையாகும். தாம் செய்ய வேண்டிய யாகங்கட்கு பிறரிடம் பொருள் சென்று கூசாது கேட்டல் கொடுப்பதை ஏற்றல் இவையாவும் வேதஒழுக்கங்களில் சொல்லப்பெறுவன.

பிரமச்சாரியாக அந்தணர்கள் வேதநெறிகளைப் பயிலும் காலத்தில் தமக்கும் ஆசாரியர்க்கும் உணவிற்காக பிறரிடம் அரிசி பிச்சையாக ஏற்க வேண்டுவது விதியாகும். இந்த இளம்பருவத்து அந்தணர்கள் பிச்சை ஏற்பது கௌரவக் குறைவு அன்று. பிச்சைக்கு இச்சித்த பெருமான் சிவன்: ஆகவே பிச்சை ஏற்பது எதுவாயினும் கௌரவக் குறைவல்ல. வேதநீதியின் சம்பந்தமுடையது பெருமையாவது.

பிச்சை என்ருல் பொருள் சேகரிப்பதற்கு தண்டல் செய்வதல்ல. பெரிய கடையில் தண்டல் செய்வது பிச்சை என்றதல்ல. அது ஒரு தன்மை. ஆனுல் அந்தணர்க்கு இங்கு பொருள் தமது தொண்டிற்காக தொண்டு செய்யும் தமது சிவபத்திற்காக வேண்டப்படுவது. மறுநாள் வாழ்வு பற்றி அன்றி அன்றைய வாழ்வு பற்றிச் சிந்தித்திடும் வகையே பிச்சை.

இந்தவகை பயிற்சியாவும் இளம்பருவத்திலிருந்து ஆரம்பமாகி உயர்ந்த சிறப்பு ஞான விளக்கமும் கொண்டு ஆசை இன்மை இலாத உத்தமராகவும் வேதநெறிக்குரியவராகவும் உள்ளவராக அப்பிள்ளை அமையும் படியே பிரமசாரிய ஒழுக்க வழக்கங்கள் உள. இதனைத் தருமிக்குப் பொற்கிழி அளித்த வரலாறு முதல் திருவிளையாடலால் உணரலாம். இந்தவகை பிச்சையும் பிராமணர்க்கு கௌரவமுடையதன்றி தாழ்வானதல்ல. இதனை யார் இன்றுநம்புவார் அல்லது சரியென்று ஏற்பார். மிலேச்ச நாகரீகம் நம்மைப் பிடித்த பெருநோயாக நிற்கும் போது இதனை நம்மக்கள் நம்பாரே.

அந்தணர்கள் பூநூல் அணிந்த பின் இருபிறப்பாளர் என்னும் பெயருடன் விளங்குவார். இதனை நன்கு சிந்தித்தால் அவர் ஏனைய மக்களிலும் உயர்ந்தவராகக் கருதப்படுவார். எவ்வாறு உயர்ந்தவர் என்பது வேதங்கள் சொல்லும் பிரமவித்தை என்னும் நெறிகட்கு உரியவராதலின் இந்தப் பெருமை கொடுக்கப்படுகின்றது.

இந்த வேதநெறிக்குரிய செயலை மேற்கொள்ளுதற்கு முதற் கண் ஒருமைப்பட்ட மனம் வேண்டும். அது தான் தனது வேதநெறிக்குரிய செயல்களைக் கருமங்களை எந்த நிலையிலும் நான் கைவிடேன். உலகில் நான் பெறக் கூடிய இன்பத்துறை எல்லாவற்றிலும் எனது வேதநெறி ஒழுக்கமே மேம்பட்டது. ஊரார் இகழில் என் உணவிற்கு வகை இன்றிப் போனுல் என் நான் வேதநெறிக்குரிய செயலை விடேன் என்பதே ஒருமைப்பட்ட மனம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தம் பதிகம் ஒன்றில் அந்தணர்க்கு தமது வேத நெறி ஒழுக்கங்களில் மன ஒருமைப்பாடு வேண்டும். அங்காலு இங்காலுமாக அந்தணர் இருமனம் படைத்தவராகக் கூடாது என்பதை சொல்கிருர். இதனை தமது பாடலில் ஒருங்கிய மனத்தோடு இரு பிறப்பு உணர்ந்து எனச் சொல்கின்ருர். இதை இன்று எவர் உணர்வார்? தகப்பன் குடுமியுடன் குருக்களாகி கொடியேற்றுருர். மகன் குடுமியை அறுத்து விட்டு குரங்கு போல் ஆகி கால்சட்டையுடன் கந்தோரில் கிளார்க் வேலை பார்க்கிருர். அது தகப்பனுக்கு பெருமையாகின்றது. ஏன் மகன் குடுமி அறுத்தவர் பூநூலையும் அறுத்தால் மிக நன்ருயிருக்கும். சில அந்தணர் தாங்கள் புரியும் வேதநெறிக்குரிய தொழிலை மனக்கசப்பால் இகழ்ந்து மிலேச்சரைப் போல் கார் இல்லையே ஆயா இல்லையே. மாளிகை இல்லையே எனவருந்துவார்க்கு ஒருமைப் பட்ட மனம் எப்படி வரும். சிவன் கழல் ஏத்தும் செல்வத்தை அரைகுறையில் விடுத்து பொருள் சேகரிக்க உத்தியோகம் வில்லிசை வியாபாரம் முதல் பலதொழிலும் பூரண மனத்திருப்தியுடன் செய்வார் பிராமணரோ சொல்லுங்கள்? இவர்களை பூநூலை அறுத்தெறியும் படி கேட்டலில்என்ன தவறு?

வேத நெறியில் ஒருமைப்பட்ட மனம் உடையவர் ஏனைய தொழில் செய்யும் மக்களுடன் இணங்க விரும்பார். ஆனுல் இன்று பூநூலைச் சேட்டால் மறைத்த பிராமணனும் சீவல் தொழிலாளியும் மீன் வியாபாரியும் மாட்டிறச்சி வியாபாரியும் சினிமாக்கொட்டகையில் இணையாக சமமாக அருகருகிருந்து சினிமா பார்க்கிருர். சிலவேளை கும்பாபிஷேக அழைப்பு கொடியேற்றக்களைப்பு சினிமாக் கொட்டகையில் தீருது! பிறகு ஏன் பகவான்.

திருமூலர் ஒரு இடத்து பிராமணரது ஒழுக்கமும் நடத்தையும் தான் முக்கியம். பூநூல் போட்டாப் போல் பெரியவராக மாட்டார் என்பதை நூலும் சிகையும் நுவலிற் பிரமமோ? எனக்கேட்டு பின்னர் சொல்வார் பிராமண நூல் என்ருல் எதைக்குறிப்பது தெரியுமோ? உன்னைக் குடுமி வைக்கச் சொன்னது எதற்குத் தெரியுமோ? என்பதை நூல் அது வேதாந்தம் நுண் சிகை ஞானம் என்பது என்கின்ருர். ஆகவே பிரமவித்தைக் குரிய வேதாந்த ஒழுக்கமும் கிரியாபாகச் சிறப்பும் ஞான உணர்வும் கொள்ள வேண்டிய உனக்கு சினிமாவும் வானெலியும் ஒலிபெருக்கியும் எதற்கு? இவை ஞான மயமோ? அடுத்து அவரே அரசனுக்குச் சொல்வதாகத் திருமந்திரத்தில் சொல்கின்ருர் இத்தகைய நெறியிலாத பிராமணரது குடுமியையும் பூநூலையும் அறுத்திடுவாய் என்கின்ருர். ஏன் எனில் வேதநெறிக்குரிய ஒழுங்கங்களில் கபடம் இருக்கக் கூடாது. அங்கு உண்மையும் புனிதமும் விளங்கவேண்டும். இதை பிராமண சமுதாயமே நீங்கள் உணருங்கள். எங்கள் அருமையான முத்திநெறிக்குரிய சமயத்தை கீழ் இறக்கிய முதல் தோஷம் உங்களிடம் உண்டு.

உலகில் எத்தனை ஏமாற்றங்களிலும் மேலான பிரமவித்தையில் ஏமாற்றம் அது ஆகாது. அது தண்டிக்கப்படுவது. ஏன் எனில் தெய்வ நம்பிக்கையை இச்செயல் இல்லாது செய்துவிடும்.

இது இல்லாது பூநூலைப்போட்டுக் கொண்டு பொய் கபடம் புரட்டு உருட்டு பொருமை கோபம் இத்தனையும் இன்று பிராமணர் செய்கிருர்! இதுவன்றி பிறர் ஆருடனும் கோபம் என்ருல் ஆரையேனும் பிறரை தனது கோபக்காரனுடன் பகை கொள்ள இல்லாத பல வஞ்சகங்களைச் செய்யும் சண்டாளராக பிராமணர் பலர் உளர். இதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது.

பல கோவில்களில் எழுகின்ற பல பிரச்சனைகட்கு தீர்வு காணமுடியாத படி இன்னம் இன்னம் பல இன்னல்களைப் பெருப்பிக்கின்ற வகை அந்தணர் நடந்து கொள்கின்றனர். இது ஒருமைப்பாடான மன நிலைக்கு பெரும் பாதகச் செயலாகும்.

வேதநெறிக்குரியவராகி நூல் அணிந்து வேதநெறிக்குரியவர் மிலேச்ச நெறிக்குரிய தொழில் பார்ப்பது வேதநெறியின் மன ஒருமைப்பாட்டை காண்பியாது. அது முழுவதும் ஏமாற்று.

திருஞானசம்பந்தப் பெருமான் தம் பதிகம் ஒன்றில் அந்தணரை நல் நிலைப்படுத்த நல் வாக்கியம் சொல்கின்ருர். அதுதான் முதலாவதாக நீர் அணியும் பூநூலை மதியுங்கள். அதனை அணிந்தால் உமக்கு ஒரு கடமை உண்டு. இருபிறப்பாளர் என நீர் சிறப்பிக்கபடுகிறிர் இந்த இரு பிறப்பினை உணர்ந்தால் உமமக்கு ஒரு கடமை எனைய மக்களிலும் பார்க்க விசேடமாக உண்டு அவை தான் மூன்று வேளையும் காலை உச்சி மாலை எனும் காலத்தல் நீர் செய்ய வேண்டிய கடமைகளை கூலிக்காகச் செய்யாதபடி உமக்காச் செய்யும். அதல்வாத போது உம்மிடம் குறை பெருகும். ஆகவே இக்குறை முடித்து ஐந்து வகையாகங்களை அமைத்து வழிபட்டு ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி சிவத்தியானம் முதல் பல செயல்களையும் பயின்றுவாழுங்கள் எனச் சொல்கின்ருர்.

திருஞானசம்பந்தர் சொல்லும் இந்த ஒழுக்கங்களை ஏற்று எந்த ஒரு பிராணராலும் நடக்கமுடியாது என பாநம் சொல்ல முடியாது என் என்றல் ஒரு அந்தணர் தெய்வ பக்தி உடையவராக இருந்தால் வேத விளக்கம் உடையவராக இருந்தால் தனது பூநூலை மதிப்பவராக இருந்தால் திருஞானசம்பந்தர் சொல்வதை அப்படியே ஏற்றுநடக்கலாம் இன்றைய உலகில் அத்தகைய சீலமுடன் வாழவிரும்பும் அந்தணர்களை உலகம் ஒருக்காலும் மதியாமல் போகாது. இதை விடுத்து வேதநெறிக்குரிய ஒழுக்க சீலங்களை கைவிட்டு டக்க முற்படும் பிரமாணரை உங்கள் பூநூலைக் களைந்துஏனைய குலத்தவர் போலாகி நீவிர் நம் வாழுங்கள் என்பதில் ஏதும் தவறில்லை பாவமில்லை

# ஒலிபெருக்கிஎன்னும்உயிர்க்கொல்லி என்றுதான்எம்நாட்டைவிட்டுஅகலும்?

உலகில் உள்ள சமயங்களில் மிகஉயர்ந்ததாகக் கருதப்பட்ட சமயம் சைவம் என்பது. இது தான் இன்று தனது நெறிகளை அமைதி இல்லாதவகை செய்யத் தலைப்பட்டுக் கொண்டது. இதனுலே இன்று எல்லாச்சமயங்களிலும் எம்சைவம் மிக மிகக் கீழ்மையான நிலையில் வந்துள்ளது. சைவமக்களே இது உண்மை. நாம் தவறுகச் சொல்லவில்லை.

இன்று எமது சமயக்கிரிகைகள் எதற்கும் குளறல் உரத்தசத்தம் இல்லாவிட்டால் மக்கள் திருப்த்தி அடைவதில்லை. இது இன்றைய நிலை: ஐயோ! ஓ ஒலிபெருக்கிக் குளாய் காணுதென்று 20 குளாய் பூட்டி ஊரடங்கக்கத்தி எல்லாரையும் ஒன்றும் செய்யமுடியாத படி திகைக்க வைத்தல் சிறந்த பூசை திருவிழா என்கின்ருர் சைவர். இதை சரி என்று எல்லாப் பிரசாரகரும் தம் பிழைப்பை நடத்த வாய்க்குது என்று இருக்கிருர்.

இரண்டாவது உலகயுத்தத்தில் ஜெர்மனியர் பிரிட்டனில் ஓலமிடும் குண்டுகள் போட்டாராம். அந்தக்குண்டு விழுந்தால்ஓலமிட்ட பின்னர் வெடிக்கும். அந்த ஓலத்தையும் கேட்ட பின்னர் குண்டால் மக்கள் சாகவேணடும் சாகிறவரும் அமைதியாக சாகமுடியாது. இந்த நிலை நம சைவக் கோவிலில் வந்துவிட்டது. 20 க்குமேற்பட்ட குளாயில் கோயிலில் ஒலிபெருக்கி குளறினல் அன்று சாகிற பிணம் எவ்வளவு சங்கடப்படும்? ஒரு நோயாளி எவ்வளவு சங்கடப்படுவர் நொய்வு, முட்டு, கட்டுக் கொதிப்பு இவற்றுடன் இருக்கும் நோயாளர் எவ்வளவு சங்கடப்படுவார்? இதை நம் சைவமக்கள் சிந்தையில் கொள்வாரா?.

இன்று சைவமக்கள் செத்தவீட்டை எப்படி நடத்துகிருர்கள்? அது தானும் அமைதியான முறையில் நடக்குதா? சவம் கொண்டு போம் பொழுது இப்பொழுது ஒலிபெருக்கியும் பாவிக்கின்றனர். எத்தனை கட்டு சீன வெடி கொழுத்துருர். அது வல்ல வேடிக்கை தெருவால் போற சயிக்கில் காறருடைய காலுக்குளும் போய்விழ சீன வெடி கொழுத்திப் போடுருர். போட்டுவிட்டு சிரிக்கிருர்.ஆனல் சவம்பின்னல் வருவதை உணரார்

ஒரு கிறீஸ்தவருடைய மரண வீட்டைப்பாருங்கள். தங்கள் துக்கத்தை எவ்வளவு அமைதியுடன் காண்பிக்கிருர். அவர் பிரதேம் போகும் போது ஏதாவது ஒரு வெடி ஆடம்பரம் ஏதும் உண்டா? சைவ மக்கள் இதைப்பார்த்து நீங்கள் திருந்தவேண்டாமா? செத்த வீடு என்று ஒரு மதிப்பு வேண்டாமா?

அளவெட்டியில் மல்லாகம் வீதியில் ஓர்கத்தோலிக்க கோயிலில் அன்றுஒருநாள் ஆராதனை நடந்தது அவ்வீதியால் நான் போய்க் கொண்டிருந்தேன். அந்த சுவாமி ஒலிபெருக்கியில் செபம் சொன்ருர். ஆனல் அந்த ஓசை கோயில் எல்லைக்குள் அடங்கி நின்றதே அன்றி வாயிலின் புறத்துள்ள தெருவால் சென்ற எனக்குக்கூடக் கேட்கவில்லை. அதல்லவோ பண்பு. சரி அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் திருவிழா நடக்கப் போகுது. அதற்கு எங்களை விடப் பெரியவர் இங்கில்லை என்ற எத்தனையோ பேர் திருவிழா நடத்தப் போருர். நிர்வாகமும் அதே நினைவுடையது. அவர்கள் யாவரும் தம் பெருமையும் கோவில் பெருமையும் எத்தனை ஒலிபெருக்கிக் குளாய் மூலம் ஊருக்குக் காட்டப் போருர்? இருந்து பாருங்கள். இது அங்குமட்டல்ல எல்லா கோயிலிலுமே நடக்குது!

உண்மையில் சைவநெறிஎக்காலமும் இல்லாத வகை மிகக் கீழ்மைப் பட்டுக்கொண்டது. தமது தவறுகளை உணராது தவற்றைக் காண்பிப்பாரைக் கொலையும் செய்யவும் கோபம் கொள்ளும் பேதைச் சைவமக்கள் முன்பாக எம் சமய உயர்வைப் பாதுகாக்க கடிந்தே சொல்ல வேண்டிய நிலைவந்தது! என் உயிர் போனுலும் பரவாயில்லை! எமது வேத நெறியை மிக உயர்ந்த சைவசீலங்களைப் பாதுகாக்க இதுகாறும் வெளிவந்த சந்திர தீபத்தால் வரம்பிட்டுக் கொண்டேன்! எனது பணியின் சிறப்பு அகந்தையின் அழுக்குடைய திருப்பணிச் சபையார்க்கும் சமயவியாபாரிகட்கும்நாற் குணத்தின் சீலம் விளங்காத பெண் பேச்சாளர்க்கும் பேதைப் பிரமணர்க்கும் விளங்கப் போவதில்லை. பதில் அவர்கள் தம் நடத்தையில் நான் குறைகள் காண்கிறேன் என கோபிப்பார். எதுஎப்படி வரினும் மேன்மை கொள் சைவ நீதிகள் பாதுகாக்கப் படல்வேண்டும்.

ஒலிபெருக்கி என்னும் கொடிய உயிர்க் கொலையாளி பற்றி அடிக்கடி நாம் தீபத்தில் எழுதினேம். இதனைக் கோவிலில் பாவிப்பார் பாவிக்கத் தூண்டுவார் இதில் கோவிலில் பேசுவார் இது பாவிக்க உடந்தையாகி இருப்பார் யாவரும் வேதம் ஆகமம் இரண்டும் சொல்பவை உண்மையானல் தீராத நரகத்திற்கு ஆளாவார் என்றதை உணர்ந்து தயவு செய்து ஒலி பெருக்கி பாவனையை கோவிலில் அறவே நீக்குங்கள் என்றேன்.

ஒலிபெருக்கி பாவனையை ஆதரித்த பெண்கள் ஆண்கள் யாவரும் அசுரத் தன்மை உடையவர். பிற உயிர்கட்கு இரக்கமிலாதவர் என்றேன் ஒலிபெருக்கிப் பாவனை தருமத்திற்கு பாதகம் தவநெறிக்கு அழிவு சிவத்தியானம்புலன் அடக்கம் இவையபில பொலாங் குடையது என்று தேளிவுபட எழுதினேன்.இதனைக் கண்டு என்னைப் பலரும் தூற்றினர். பிராமணன் தன் புகழை விரும்பி தனது கையாட்கட்கு கள்ளும் குடிக்க காசு கொடுத்து அடிப்பிக்க முயன்ருன். சிவத்தமிழ் ஒருத்தியின் தொண்டர் படை நம்மைத் துயர் உறுத்தியது. சட்டத்தரணி ஒருவர் ஒலி பெருக்கி இல்லாத கோவில் என்ன எனக் கேட்டார். அது நீக்க எழுதுவது குற்றம் என்ருர். இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் இலங்கையில் உள்ள பத்திரிகைகளில் என்கையால் தொடாத ஒரு பத்திரிகை உன் சந்திரதீபம் என நேரில் என்னிடம் தெரிவித்தார். பலரும் என்து பத்திரிகையில் கண்டனம் தான் கூட ...

சிலர் தம் வயிற்றுப் பிழைபிற்க இவன் ஒருதன் குறுக்கேவந்து தொந்தரவு தாருன என்றனர். வில்இசை மூலம் என்னைக் கேலி செய்தனர். எத்தனையோ துயரம் நமக்கு பெருகின. என் ஊரை விட்டுபோகும் படியும் நிலை வந்தும் நாம் தளரவில்லை.

ஏன் எனில் நான் எம்பிரானுடைய ஆலயங்களிலாகுதல் தருமநெறி தழைக்க வேண்டும் வஞ்சனை இருக்கக்கூடாது மக்கள் இறைவன் இருப்பிடத்தை பயபக்தியுடன் பேண வேண்டும். கலகம்பண்ணுமிடமாகக் களியாட்டத்திற்குரிய இடமாக அமையக் கூடாது என உண்மை உணர்ந்து கபடம் ஏதும் இன்றி உலக நலனுக்காக கண்டனங்களை வெளிப்படுத்தினேன்.

யார்பாலும் குரோதமோ பொருமையோ எதுவும் இல்லை. இது தான் நன்மை என உணர்வதை உரைத்தவன். என்னில் குறை காண்பார் என்ருவது ஒருநாள் நான் சொல்வது சரி என ஏற்பர் என்பது திடமாகக் கொண்டு என்பணியைக் களங்கமின்றிச் செய்து வந்தேன்.

சில நாளைக்கு முன்பு ஒரு நாள் நண்பர் ஒருவர் என்னைக் கண்டார்- அவர் என்னை நோக்கி உங்கட்கு ஓர் நற்செய்தி சொல்லப் போகின்றேன் என்ருர். நான் சொல்லுங்கள் என்றதும் அவர் என்னை நோக்கி அன்று ஒரு நாள் சிவதொண்டன் நிலையத்தில் வழிபாடு நடந்தது. அப்பொழுது நானும் அங்கு போயிருந்தேன். அந்நேரம் அயலில் உள்ள பிள்ளையார் கோவிலில் ஒலிபெருக்கி கதறிக் கொண்டிருந்தது. உண்மையில் எங்களால் பிரார்த்தனை செய்ய முடியவில்லை. நாங்கள் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தோம். புராணப் படிப்பு நடத்த முடியவில்லை. வாசிப்பது பயன் சொல்பவர்கே கேட்க முடியாது இருந்தது. அப்பொழுது அங்கு மல்லாகத்தைச் சேர்ந்த இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் செல்லப்பா வந்திருந்தார். அப்பொழுது தான் அவர் சொன்னர் நல்லையன் சொல்வது சரி தான் என்ருர். நான் நினைந்தேன் இவர் முன்னா துர்க்கை அம்மன் கோவில் விடயத்தில் உங்களைக் குறை கூறினவர். இன்று அவரும் நீங்கள் சொல்வதை உணர்கின்ருர் என நினைந்தேன். எனக் கூறி விட்டு ஓர் பாராளுமன்ற அங்கத்தவருடைய மனைவியும் அயலில் உள்ள இன்னுமொரு கோவிலின் ஒலிபெருக்கிக் கதறலைக் கேட்டு சகிக்க முடியாது வேதனைப்பட்ட செய்தி சொன்னர் எனவும் அந்த அன்பர் தெரிவித்தார்.

இம்முறை சுழிபுரம் பறளாய் முருக மூர்த்தி கோவிலில் இலட்சார்ச்சனையின் போது ஒலிபெருக்கி பாவிக்கப் படவில்லையாம். கோவில் குருக்களை இன்னுமொரு கோவில் குருக்கள் கேட்டாராம் 'நீங்கள் என்ன சந்திரதீபத்தை ஆதரிக்கவோ இம்முறை ஒலிபெருக்கி நிற்பாட்டினியள் எனக் கேட்டதும் அந்த குருக்கள் இலட்சார்ச்சனைக்கு ஒலி பெருக்கி அவசியமில்லை. ஆனல் நான் நிற்பாட்டினது பணப் பிரச்சனை என்ருராம்.

அந்தணப் பெருமக்களே! எனக்காக நான் சொல்வது சரி என்றதற்காக ஒலிபெருக்கி நிற்பாட்ட வேண்டாம். நீங்கள் பூசை முடித்து வேதம் சொல்லிய பின்பு ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி என மூன்று முறை சொல்வீர். அதன் பொருளை உண்மையாக விளங்கிடில் நன்று! நான் உலகைத் திருத்தவில்லை. கோவில்களில் உண்மை துலங்கத் தொண்டு புரிபவன். சொல் ஒன்று செயல் ஒன்றுக இலாமல் சொல்லும் செயலும் ஒன்றுக கிரியைகள் அமையும்படி தொணடு புரிபவன்.

ஆலகாலம் எனும் நஞ்சு அன்று வந்தது அதனுல் தேவர் துயருற்ருர் எனக் கேள்விப்பட்டோம். ஒலிபெருக்கி எனும் கொடிய நஞ்சு இன்று தமிழ் பிரதேசங்களை கொள்ளை கொள்ளுது அன்று நஞ்சை உண்டு காத்தமைபோல் இன்று இக்கொடுமையையும் எம்பிரான் சிவன் நீக்கி உலகை உய்விப்பாராக.

## கோவில் ஒலிபெருக்கி மரணசோகத்தையும் மதியாது.

இப்படியாக சுன்னுகம் கதிரமலைச் சிவன்கோவிலில் ஓர் செயல் நடந்துள்ளது இங்கு வேதநெறியை மொடேர்ன் முறையில் பயிலும் ஓர் ஐயர் உளர். இக்கோவில் திருவிழாவில் யாவற்றுக்கும் ஐயர் கொன்ருக்கில் றேட் வைத்துள்ளார். ஒரு திருவிழா அன்று முன்னல் வீட்டிலிருந்த இளம்பிராமணப் பெண் மிருத்தான வகை நோயுற்று இறந்தது. அன்று பிரேதம் பகல் 12 மணிக்கு எடுத்த கையுடன் பிரேதம் அங்கால்சென்றதும்ஐயர் தனது ஒலிபெருக்கி குளறலைத் தொடங்கினுர். என்னஎன்ருல் குத்தகையாகப் பிடித்த ஒலிபெருக்கி அன்று நிறுத்தினல் கொன்ருக்கில் நட்டம் பேகம். மரணவீட்டாரில்பரிந்து அன்ருகுதல் ஒலிபெருக்கி நிறுத்திட ஐயருக்கு மனம் வரவில்லை. கோவில் மடப்பள்ளியில் இருந்து இன்பத்துறையில் இனிது வாழும் அவர்க்கு கோவில் புனிதமோ அல்லது சாதரணமாக உயிரிடத்து கொள்ள வேண்டிய இரக்கமோ வராது. இன்பத்துறையாளர்க்கு யார்இறந்தாலும் அவர்க்குதன் இன்பமே பெரிது! இது வன்றி அயலில் உள்ள மயிலணிக் கந்தசுவாமி கோவிலில் ஒலிபெருக்கி விளக்கே வாங்கி உள்ளார். கோவிலில் பூசைநடந்தாலும் நடவாது விட்டாலும் ஒலிபெருக்கி பாடினுல் கோவிலில் நடக்கும் பாதகங்கட்கும் அது பிராயச்சித்தமாகும் என்பது இம்மக்களின் கருத்துப் போலும். இன்று புலவர் பரம்பரையினருக்கு பூசையிலும் பிரசாரமே பெரிதாகக் கொள்வார்கள் பிரசாரத்தால்இப்பிறப்பிலபுகழ்கிடைக்கும்பட்டம் பதவி ஆட்டம் ஓட்டம் பவனி ஊர்வலம் எல்லாவற்றிற்கும் இடமளிக்கும். பூசையில் என்ன தங்கி இருக்கிறது. திருநாவுக்கரசர் காலத்தில் ... பெரிது இன்று ஒலிபெருக்கியே அதைவிட பெரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்பெருமானது கோவில்களை வியாபார நிலையமாக்கவோ முயல்வீர்

இன்று எமது சைவமக்களது கோவில் பரிபாலனத்தை அவதானித்தால் அது மிகமிகக் கவலை தருவதாக உள்ளது. ஐயோ இன்று கோவிலை வியாபார நிலைய மாக்கிக் கொண்டனர். கொலைகாரரும் காடையருமாகவே கோவில் திருப்பணிச் சபையார் எஜமான்கள் இருக்கின்றனர் என்றால் அது தவறில்லை எனலாகும். என்ன கொலை என்றால் முதற்கண் தருமக் கொலையே செய்துள்ளனர். என்ன காடைத்தனம் என்றால் கோவிலை தருமத்தின் நீதியுடன் நடத்தும் படி வேண்டுவாரை துன்புறுத்தும் நிலைக்கும் பரிபாலனஞ் செய்வோர் துணிகின்றனர். எம்பிரான் சிவனது வாகனம் இடபம். அது தருமதேவதையாவது என அறிவார்க்குஒரு கோவிலை எப்படி நடத்த வேண்டும் என்பது நன்கு விளங்கும். கோவில்கள் நடைபெறுவதற்கு முன்னர்க் காலத்து பெரியவர்கள் நிபந்தம் வகுத்தனர். அதன் அர்த்தம் கோவிலை வழிபட வரும் எவரிடத்திருந்துமே வன்முறையாலோ அல்லது கண்டிப்பான கட்டளையாலோ அறவிடுதலாலோ பணம் கோயிலைப் பரிபாலித்தற்கு சேகரிப்பதன்றி அன்பின் கொடையினையே ஏற்கும் படி இருந்தது. இதனால் வழிபடச் செல்வோர் தம் கடன்களை தொண்டுகளைச் செய்வதற்கு ஏதும் ஒரு முட்டோ முனிவோ இருக்கவில்லை. அடுத்து கோவிலில் உபயம் செய்வோர். தன் இயல்பிற்கு ஏற்றவாறு உபயம் செய்யவும் நிலை அமைத்தனர்.

கோவிலில் யார் இருக்கிறார் அங்கு எப்படி நடக்க வேண்டும் எப்படி அதை நிர்வகிக்க வேண்டும் என்பது எவர்க்குமே தெரியாது இருக்கிறது. தெரிய வேண்டிய பிராமணன் அவன் பிரமகத்தி பிடித்தவன் போல்பேதையாய் விட்டான். அவன் கோவில் ஓர் அறநிலையம். அது தான் தரும நிலையம் என்பதை மறந்தே விட்டான்.. அவன் கோயில் தன் வயிற்றுச் சோற்றிற்கு வருவாய் தரும் இடம் என எண்ணிக்கொண்டான். இனி அவனை அந்தநிலையில் இருந்தும் மீட்டெடுக்க யார்க்குமே முடியாது.

அடுத்து கோவிலை தம் புகழ் கீர்த்தி பெருமை இவ்வளவையும் பெருக்க நிற்கும் பாவிப் பிரசாரகர் தம் பிழைப்பிற்கும் பட்டம் பட்டங்களுக்கும் வசதியான இடமாகக் கண்டு கொண்டனர்.

இன்று இலங்கையில் உள்ள எந்தக் கோவில் எஜமானுக்கும் திருப்பணிச் சபைக்கும் கோவில் நடை முறைக் கென ஒரு நீதி உண்டு அவற்றை அறிவீரோ? என்றால் தெரியும் என்று சொல்லவோ யாரும் இல்லை எனலாம். அப்படி இருந்தால் அதில் சொல்லிய வண்ணம் நடக்கும் திருப்பணிச்சபை எஜமான் எங்கு உண்டு யாரும் காட்டுவீரோ? எனவே நாம் கேட்போம் எவ்வாறு துணிந்து இதைச் சொல்லுகிறீர்? உமக்கு என்ன பைத்தியமா என யாரும் கேட்கலாம். ஆனால் அதற்கு நாம் சொல்லும் பதில் அப்படியாக இருந்தால் எந்த ஒரு கோவிலில் வேத நெறிக்குரிய நீதிகள் நடைபெறுகின்றன. அப்படி வேதநெறிப்படி நடவாமை அக்கோயில் நன்றெள் தவறுண்டு போவதற்கு இவரல்லாது வேறு யார் காரணம்?

இந்துசாதனப் பத்திரிகையில் கடமைபுரியும் ஒருவர் அடிக்கடி எதற்கும் ''ஆனந்தம்'' எனச்சொல்பவர்.

சிவராத்திரி நடுஇராத்திரியில் மாலு மாலு சுருங்கனிக்க மாலு என்ற பாட்டுப் பாடினாலும் அல்லது ''மெல்ல மெல்ல அருகில் வந்து பெண்மையாலசைக்கப்பற்றி அள்ளி அள்ளி அணைக்கத் தாவுதே நீயும் அச்சத்தோடு நாண ஓடுவாய்'' எனும் பாடலைப் கோவிலில் பாடினாலும் வேதஇசை பாடவேண்டிய பிராமணன் வில்லிசை பாடினாலும் எதற்கும் ஆநந்தம் என்றே பாராட்டுவார். அப்படிப்பாராட்டினால் எல்லாருடைய நன்மதிப்பையும் பெறுகிறார்.

நமது நிலையில் அது சரிவராது. என்னால் அப்படிச் சொல்ல முடியாததால் எல்லாருடைய வெறுப்பையும் நான்பெறுகின்றேன். அதுவன்றி துர்க்கா துரந்தர தாச பண்டாரங்களின் மோததலுக்கும் ஆளாகின்றேன். என் மீது என்ன சட்ட நடவடிக்கை எடுக்கலாம்என சில பாராளுமன்ற அங்கத்தவரை சிந்திக்கும் படியும் வைத்துள்ளேன். இது வன்றி இரவில் கண்டபடிதிரிய வேண்டாம் என்று பல நண்பர்கள் என்னை எச்சரிக்கும் படியாயும் வந்துள்ளேன். இப்படி எனக்கு தினம்தோறும் சங்கடம் பெருகிறது. ஆனல் இந்துசாதன ஆநந்தத்திற்கு தினம்தோறும் ஆநந்தம் பெருகுகின்றது.

எல்லோருக்கும் இணைவாக அவர் அவர் செய்வதற்கு எல்லாம் ஆமாப் போட்டு புகழ்ந்துரைக்கும் பத்திரிகைகள் இலங்கை நகரில் பெருவாரி உள. எவருடைய செயலிலும் தீங்குகாணாது நன்மை காண்பிப்பது அவர் கொள்கையாவது. ஆனல் என்விதிவசம் தவறு செய்வாரைத் தவறு செய்கின்றீர் என்று சொல்லிட வைத்ததையிட்டு நானே வேதனை உறுகிறேன். அடுத்து இந்த மாதிரியான நமக்குற்ற வெறுப்பு நிலை நாயன்மார் காலத்தும் அவர்க்குப் பிந்திய பெரியார்கள் காலத்தும் நிறைய உண்டு. ஏன் என்றால் உலகில் மக்கள் பிழைவிடும் போது அவர்களை கண்டியாமல் விடவில்லை. திருநாவுக்கரசர் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று நோகாமல் மக்கள் மனதில் படும்படி சிலவார்த்தைகள் சொல்லி விடுகின்றார். முற்பக்கத்தில் தரப்பட்டதேவாரத்தை நன்கு சிந்தித்து ஆராய்ந்தால் நன்கு புலப்படும்.

கன்றாப் பூரில்கடவுளைப் பாடப் போன திருநாவுக்கரசர் இன்ன இன்ன ஒழுக்கமுடைய மனிதரில் கடவுள் இருக்கிறார் காணலாகும் என்கின்றார். இவருக்கேன் இந்தவேலை பிராமணன் என்னசெய்தால் என்ன புகழ்ந்தி என்ன செய்தால் என்ன நீர் கடவுளைப்பாடும் மற்றவர் பற்றி உமக்கு அக்கறை வேண்டாம் என்று தான் நான் அவரிடம் கேட்டிருக்கலாம்? அவர் இப்பொழுது இல்லை.

இதே நிலையில் மணிவாசகரும் உலகமக்களுடன் கொளுவிக் கொள்ளுகின்றார் உலகம் விடுமா? மடையன் பேயன் என்று வைது இருக்கும்! நாங்கள் எப்படி நடந்தால் இவன் மணிவாசகனுக்கு என்ன என்று வைது இருக்கும். பிராமணன் கொடுக்கிழுத்து கட்டிக் கொண்டு கத்தி எடுத்திருப்பான். பிராமணத்தி பொல்லு எடுத்து எறிஞ்சிருப்பாள். சிவத்தமிழின் வால்கள் வாள் தூக்கி இருக்கும். தம்பிரான்கள் கக்கூசு வாளி வைத்திருப்பார் வாரியார் மண் அள்ளி எறிய கூடை நிரப்பி இருப்பார்: பண்டிதர்கள் பறை மேளத்திற்கு சொல்லி அச்சவாரம் கொடுத்து அவரை பறை அடித்து விரட்டி இருப்பார் மாணிக்கவாசகர் இதை எல்லாம் பெற்றிருப்பார். ஆதலினால் அவர் தமது ஒருபாடலில் உலகம் தன்னை என்னசொன்னது என எம்மை நினையவைக்கிறார் அதுதான் மருளா மனத்து ஓர் உன்மத்தன் வருமால் என்று இங்கு எனைக்கண்டார் வெருளா வண்ணம் மெய்அன்பை உடையாய் அருளவேண்டுமே'' என்று குறைவாக உலகிற்கு உபதேசிக்கப் போய் என்னை முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு பழகிய பழக்கத்தை நீக்கி பத்தி நெறி தந்து ஆண்ட நீ உன்னிடம் அன்பைத்தந்து உலகத்தைத் திருத்தும் சங்கடத்தில் நின்று காப்பாற்று எனவே வேண்டுகின்றார்.

இவர்க்கு பிந்திய காலத்து அருணகிரியார் தோன்றியவர் அவரும் தமது காலத்து உலக மக்கட்கு சைவ நன்நெறியின் உயர்வு திருப்புகழ் மூலம் சொன்னவர். சிலத்தை மெல்லத் தெளிந்தறிவார் சிவயோகிகள் என மொழிந்து விட்டு கபடமுடைய வேடதாரிகளையும் துர் நடத்தை உடைய பெண்களையும் கண்டபடி வைபவர். அவர் தற்செயலாக இன்று இருந்து கோவிலில் நடைபெறும் அநியாயங்களைக் காண்பாரேயாகில் இருந்தால் அதற்கு பிறகு பேச வேண்டியதில்லை.

அப்படியான அருணகிரியார் தமது திருப்புகழ் ஒன்றில் தனக்கு அவரிதிப்பு வீட்டிலிருந்தே தொடங்கியது வெளியில் உள்ளார் மட்டுமன்றி வீட்டிலும்வெறுப்பு ஆரம்பமாயது என தம்பாடல் ஒன்றின் மூலம்தெரிவிக் கின்றார் ''மனையவள் நகைக்க'' என ஆரம்பிக்கும் அப்பாடலில் அவர் சொல்வதைக் கேளுங்கள்! மனையவள் நகைக்க ஊரின் அனைவரும் நகைக்க, தன் தந்தையும் சுற்றமும் தன் போக்கைக் கண்டு மனம் சலிப்பநாயேன் உலகமக்களும் பெண்களும் விடும் பிழைகளை துர்நடத்தைக்கு வழிகோலும் செயல்களைக் கண்டு உள்ளம் பதைப்ப அப்பதைப்பால் சில வார்த்தைகள் சொல்ல அது கண்டு உலகம் சீ சீ இவன் ஒருமனிதனோ என பல வசைகளை உண்மை விளங்காது பிதற்றி எல்லாரும் இகழ நான் என் செய்யலாம் முருகா என்ன செய்யலாம் கள்ளக் கடத்தலில் காசு கொண்டு போறவன் கணவன் இல்லாத நேரம் பிறர் அழகுடன் வருவாரை வசித்து அணைக்கும் பெண்கள் மன்னர் வடிவான கொண்டை கட்டி சேலை உடுத்து குறி எழுதி கோலமுடன் நிற்பாரை இவர் வழி பிழை என்றால் எல்லாரும் இகழ்கிறார். இகழ்வார் பிழை உண்மை வழி நடப்பது தான் உன்னை அடையும் வழி என்று உணர்ந்து உன் திருவடி நாடினால் உடன் அருளும் கிட்டவில்லை உலகம் இகழாது விட்டதுமில்லை. நான்என் செய்யலாம்? இன்ன தன்மையில் மனதில் சந்தேக இருள் பெருகிப் பெருகி அதனால் மனக்கவலை என்னும் இருள் மிகுந்து வாடி உடம்பு கெட்டு நோயுற்று நான் இறக்கும் வேளையாகுதல் ஒருக்கால் என்னை அணுகி என்னை ஆட்கொள்ளும்அன்றுஆதரவாகக் காட்டிய பேரின்பவெள்ளம் பெருக்கெடுத்தோடும் திருப்பாதம் நான் காண அருள்வாய் என்கின்றார்.

உண்மையில் அடபழுக்கற்ற தூய சிந்தை உடைய பெருமக்கள் அனைவரும் என்ன தன்மையாக தம்மை உலகம் மதித்தது அப்படியே சொல்கின்றார்கள்.

இன்றைய உலகில் எவர் ஒருவர் தனக்குற்ற பழுதுகளை வெளிப்பட பொழிய வல்லவர் காட்டுவீரோ? ஒருவரும் இல்லை எனலாகும். இதே நிலையில் தான் உலகம் அமைந்தபடியால் உண்மையைத் தைரியமுடன் சொல்லி நன்மையுடைய நீதிகளை வளர்க்க முடியாது போயது! இதனாலே இன்று நீதிகளை நெறிகளைக் கோவில் வழிபாட்டு முறைகளைச் சொல்லி நன்நெறிப்படுத்த மக்கள் இலாத போது கோவில் நடைமுறைகள் நெறிகெட்டு தறகெட்டுப் போயின. கோவிலில் இருக்க வேண்டிய புனித நிலை கெட்டு கோவில் ஒரு சுப்பர் மார்க்கெட் நிலையமாக அமைந்து விட்டது.

எங்கள் இல்லத்து கோவில் செல்ல சில பெண்மணிகள் கூடுவார்கள். கூடுகின்றபோது முதற் கண் பேசப்படுவது கோவிலடியில் வாங்கப்படும் சாமான்கள் பற்றியனவேயாகும். நேற்று ஒருத்தி போய் வாங்கி வந்த பொருளின் விலை உயர்வு தாழ்வு கோயில் அர்ச்சனை ரிக்கற் இவைகளே பேசப்படும். கோவில் போனதும் கும்பிட்ட கையுடன் பிள்ளைகட்கு வாங்கிக்கொடுப்பது கடலைக் கொட்டை. இந்தக் கடலைக் சோதை வாயில் வைத்து கடித்து எச்சிலுடன் கோதை வீதி எல்லாம் குழந்தை கொட்டும். பாய் தலைகணி கடலை ஐயோ சொல்லமுடியாத அத்தனையும் அங்கே வாங்கி பாயை விரித்து நாலு பேர் கூடி இருந்து சகவாச மான கதை. இதுவன்றி கும்பிட்ட கையுடன் வெற்றிலை ஒன்று போட்டு வீடியும சிகரட்டும் சுருட்டும் ஒருதரம் பிடித்து பின்னர் வீடு திரும்பும் மக்களை நீங்கள் காணுதிருக்க மாட்டீர் என நம்புகிறேன்.

ஒரு கோயில் திருவிழாவில் சுவாமி வீதி வலம் வந்து முன் வாசலில் வந்தால் குருக்கள் சுவாமிக்கு பாததீர்த்தம் கொடுப்பது என ஒரு கும்ப நீரைச் சரித்து ஊற்றுவார். இந்த பாததீர்த்தம் கொடுப்பது என்பது சுவாமி வெளியில் சென்றவர் திருப்பாதம் கழுவி உட்புகுகின்றார் என்பது அர்த்தம். பாததீர்த்தம் கொடுக்கும் பிராமணன் தான் கால் கழுவி உட்பிரவேசிக்கிறானே? எங்காகிலும் ஒரு கோவிலில் காட்டவல்லீரோ? ஐயோ ஸ்கூட்டரில் வெளிவீதியில் மட்டுமன்றி உள்வீதியில் நேரே உள்மண்டப வாசலில் போகவில்லையா? காலும கழுவாமல் உள்ளுக்கு போக வில்லையோ? தம்பிரானே நீ என்ன செய்தாய். சிவததமிழே நீ என்ன செய்கிறாய் வாரியே நீ என்ன செய்கின்றாய். உங்கட்கு என்ன கோயில். அங்கு ஒழுங்காய் நடக்கத் தெரியாத உங்கட்கு என்ன பிரசங்கம்?

அடுத்து கோவிலில் கொடியேற்றும் குருக்கள் காப்புக் கட்டினால் பின்னர் தன் வீடு செல்லக்கூடாது. பெண்களைத் தீண்டக்கூடாது. சிவத்தியானம் ஒழுக்கமான நடத்தையுடன் கொடியேற்றக் காலத்தில் இருக்கவேண்டியது நியமம். ஆனல் இன்று ஒரு சிலரைத் தவிர மற்றையோர் எல்லாம் என் செய்கின்றார். வீட்டில் மனைவியுடன் சயனித்து உணவு உண்டு வராதவர் உண்டோ? பெரும்பாலும் இந்த விடயங்களில் எந்த திருப்பணிச்சபை கவனம் செலுத்து கின்றது. காட்ட வல்லீரோ?

அடுத்து இப்படி கோவில் இருக்க வேண்டிய புனித நிலையில் இல்லாதிருப்பதற்கு காரணம் கோவில் ஓர் வியபாரநிலையம் என்று கருதியதேயாகும். இதை நம் மக்கள் சிந்திக்கவேண்டும்.

நாயன்மார் காலத்து கோயில்கள் எப்படி இருந்தன என்பதை நாயன் மார் தேவாரப் பதிகத்தைக் கொண்டு ஆராயப் புகுந்தால் கோவிலில் மக்கள் சென்று தம் மனம் நிறைய இறைவனை வழிபட்ட வரலாறுகள் உண்டு. திருஞானசம்பந்தர் ஓர் தேவாரத்தில் மைந்தரொடு மடவார் தீண்டி வழிபாடு செய்கோயில் என்றும் பத்திமலர் தூவ முத்தி எய்திடாமே என்றும் தூபமிடல் மாலை கட்டல் சூடக்கொடுத்தல் பிரதிட்டை செய்தல் திருவமுது படைத்தல் திருமஞ்சனமாட்டல் இவை ஏதும் ஒரு முட்டுமில்லாது யாருடைய முனிவும் இல்லாது நடைபெற்றன என்றும் கூறப்படுகின்றது?

திருவாரூரில் மக்கள் சென்று எப்படி வழிபட்டார் என்பதை தேவாரப் பதிகத்தால் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர்க்கு மொழிகின்றார். ''முத்துவிதான'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தால் இந்த வழிபாட்டின் நிலையை உணரலாகும். இதை நமது தீபச்சுடரில் முன் ஒரு முறை தந்துள்ளோம். ஆனல் வழிபடுவோர் ஏதும் கபடமின்றி அருள் பெருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட இருந்த நமது ஆலயங்கள் யாவும் இன்று கைகூப்பிக் கும்பிட்டாலும் காசு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நான் அறிந்த வகையில் சில கோவில்களில் நடைபெற்று வரும் அநீதியாள பணம் வசூலிப்பு முறைபற்றியும் மாண்பிலாத முட்டுடைய செயல் பற்றியும் சில வரலாறு கீழே தருகின்றேன்.

## பிரதிட்டை செய்தவர் இடையில் எழுப்பப்பட்டார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் சமீபகாலத்தில் கோவில் நிர்வாகத்தினுல் நிதி திரட்டும் புதிய முறைகள் கையாளப்பெற்றன. அவையில் ஒன்று பிரதிட்டை செய்வார் கோவிலுக்கு மூன்று ரூபா கொடுத்து ரிக்கற் எடுக்க வேண்டுமாம். இந்த நிதி திரட்டும் புதிய முறை ஒரு அன்பருக்கு தெரியாது அவர் ஓர் ஏழை. மிலேச்ச நாகரீகத்தின் இறுமாப்பு விளங்காதவர். துர்க்கை அம்மன் சிங்கப்பூர் காசின் பிடுக்கில் அகப்பட்டு மிலேச்ச நெறியாளரின் கூச்சமிலாத பாதகச் செயலை பார்த்துக் கொண்டு இருக்கிருள் என்பது விளங்காதவர். என் செய்வார் கொஞ்சம் தன் குடிசைக்குரிய தெய்வம் தானே துர்க்கை அம்மன் என நினைந்தார். ஆனுல் இன்று பெரும் உத்தியோக ஐயாமாரின் பரிபாலனத்தும் அவர்களது மக்களாகும் தொண்டர் படை என்னும் கூச்சமின்றி அடிக்க வல்ல வீராதி வீரரின் கண்காணிப்பில் இருக்கின்றவளாக இருக்கிருள் என்பது தெரியாது. நான் போய் என்தாயைப் பிரதிட்டை செய்வேன் என எண்ணி கோயிலுக்குச் சென்முர். அம்பாளை வணங்கி விட்டு வழமையாக இது காறும் செய்து வந்த பிரதிட்டையைச் செய்தார். உருண்டு கொண்டு அரைவாசி இடம் போனுர். உடன் ரிக்கற் பரிசோதிக்கும் வீர இளைஞர் அவரை நோக்கி வந்தார். ஏ ரிக்கற் எடுத்தாயா மூன்று ரூபா கட்டினுயா? இல்லை என பதிலழித்தார். எழும்பு என்ருர் பரிசோதகர். பிரதிட்டை செய்தவர் அரவாசியில் எழுந்தார். அவரிடம் மூன்று ரூபா இல்லை. பிரதிட்டை செய்ய முடியாது என்ருர் திருப்பணிச்சபைப் பரிசோதகர். அன்பா நின்று அவதியுறுததை அருகில் பார்த்து நின்ற சில பெரியார்கள் அவர் காசைத் தாங்கள் தருவதாகச் சொல்லி ஏதோ அவர்கள் மூன்று ரூபா கொடுத்தார்கள். பின்னர் பிரதிட்டை தொடர்ந்தது. இதுவன்றி அயல் கிராமங்களில் இருந்து கோவிலில் அம்பாளைக் கும்பிட வந்த பல தாய்மார்கள் வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் காசு மூன்று ரூபா அடி அழிப்பார்க்கும் என விதிக்கப்பட்ட படியால் அடி அழித்தல் செய்யாது திரும்பிச் சென்றனராம். இங்கு தான் சிவத்தமிழ் செல்வி துர்க்கா துரந்தரி திருப்பணிச்சபைத் தலைவியாக உளர். இதுவன்றி இங்கு இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் உபதலைவராக உளர். ஓர் கல்லூரி அதிபர் காரியதரிசியாக உளர். கூட்டனியைச் சேர்ந்த ஓர் பாராளமன்ற அங்கத்தவர் கோவில் தர்மகர்த்தா சபையின் ஒரு அங்கத்தவருமாகும் எப்படி தருமம் வளர்க்கிருர்?

## ஒருகொத்து அரிசிக்கு ஐந்து ரூபா

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் நீண்ட காலமாக சுதுமலைக் கிராமத்து மட்டுமன்றி அயலில் உள்ள கிராமங்களான பலவற்றிற்கும் அருள் பாலிக்கும் தெய்வமாக விளங்குபவள். பலரது துன்பங்களை நீக்கி அருள் ஈந்து இரட்சிக்கும் தெய்வமாக விளங்குபவள். அவள் திருவடியில் நம்பிக்கை கொண்டு வாழும் பல குடும்பங்கள் அவள் கோவிலிற்கு திருவமுதிற்கு அரிசி கொடுத்து பூசை செய்விப்பது வழக்கம்.

அச்கோவில் கஸ்த்தூரியார் குடும்பத்து வைத்தியர் முத்துக்குமாருவின் பரிபாலனத்தில் நடைபெற்று வந்தது. அவரின் பின்னுல் நீர்ப்பாசன மின்சத்தி அமைச்சு நிரந்தரக் காரிய தரிசி ஸ்ரீகாந்தா ஆங்கில வைத்தியர் பசுபதி அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. இவர்கள் தமது உறவினர் என்று சொல்லப்பெறும் ஓர் இளைப்பாறிய ஆசிரியரிடம் கோவில் மேற்பார்வையைக் கொடுத்தனர்.

இந்த ஆசிரியர் கோவிலைப் பொறுப்பேற்றவுடன் பல பல சட்டங்கள் புதிது புதிதானவை உண்டாக்கினுர். கோவில் பூசைக்கு அரிசி கொடுப்பவர் 5 ரூபா கோவிலுக்கு கொடுக்க வேண்டும் என்று சட்டம் விதித்தார் இந்த சட்டம் எனக்கு தெரியாது. எங்கள் குடும்பம் அம்பாளைக் குல தெய்வமாகப் போற்றுவது. நமது குடும்பத்தில் ஓர் குழந்தை பிறந்தது அதனை கோவிலிற்கு முதல் முதல் எடுத்துச் செல்ல வேண்டி காலையில் அம்பாளுக்கு அரிசியைக் கொண்டு சென்று கொடுங்கள் என எங்கள் குடும்பத்தினர் சொல்லிய படியால் நான் அரிசியை எடுத்துக் கொண்டு கோவிலுக்கு சென்றேன்.

கோவில் சென்றதும் புதிய ஆசிரிய எஜமான் வாசலில் சண்டிக்கட்டுடன் நின்ருர். என்னவோ எனக்கு அவரைக் காணப் பயம் வந்தது. ஏன் என்ருல் அக்கோவிலில் கந்தபுராணப் படிப்பு நடப்பது. அதில் சூரன்போர் படிப்பிற்கு பயன் சொல்ல என்னை வருமாறு அன்றைய உபயகாரர் அழைப்பது வழக்கம். அவரும் வேறு சில விசேட படிப்பு உபயகாரரும் என்னை அழைப்பது வழக்கம், இந்த புதிய ஆசிரிய மேற்பார்வையாளர் வருமுன்பு நான் சென்ருல் அர்ச்சகர் முதல் அனைவரும் என்னை வரவேற்று பயன் சொல்ல வைத்து மிகுமரியாதையாக அனுப்புவர்

இம்முறை நான் சென்ற போது குறிப்பிட்ட ஆசிரிய முகாமையாளர் நான் பயன் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஓடோடி வந்து ஓய் நீர் எழும்பும் நெடுக நீர் சொல்ல முடியாது. என முறைத்தார் நான் உடன் எழுந்து வந்து விட்டேன். உபயகாரரும் வேறு என்பயனைக் கேட்க விரும்பும் பலரும் என்னை இன்னும் சிறிது நேரம் சொல்லும் படி கேட்டனர். நான் சொன்னேன் ஐயோ நான் ஒருபோதும் வஞ்சனைக்கும் தருமக் கொலைக்கும் இடமளியேன் நான் அம்பாள் அருள் பெற அவளுக்கு தொண்டு செய வந்தவன். கோவிலில் வஞ்சனையின் இருள்பெருகிக் கொண்டது. இனி நின்ருல் ஆபத்து எனக் கூறி விட்டு மிகு வேதனையுடன் வந்தேன். வந்த என்னை ஆசிரிய முகாமையாளர் தொடர்ந்து வந்து இந்த இடத்தில் நில்லாமல் போம் என்றவர்.

அப்படியான பாதகர் வாசலில் நிற்ப அவரைக் கடந்து உள்நோக்கி போக மனம் வரவில்லை. ஆகவே நான் நேராக ஐயரது இல்லத்திற்கு அரிசியைக் கொண்டு சென்று கொடுத்தேன். ஐயர் சொன்னுர் இப்ப சட்டம் வேறை அங்கை கோவிலில் தான் கொடுக்க வேணும் கணக்கப் பிள்ளையிடம் கொடும். காசும் ஐந்து ரூபா கட்டவேணும் என்ருர். நான் சொன்னேன் சிங்கமுகாசூரனிடத்தில் என்னை நீங்கள் போகச் சொன்னுலும் போறன். ஆனுல் சுதுமலை அம்மன் கோவில் எஜமானிடம் நான் போகேன். ஐயா அவர் வாசலில் நிற்கின்ருர் அங்கு ஒருபோதும் நான் ஒருக்காலும் உட்போசேன் தயவு செய்து கொண்டு வந்த அரிசியை திரும்பி நான் எடுத்துச் செல்லாது இதை ஏற்று வேண்டிய ஒழுங்கலைச் செய்யும் என்று அவரிடம் காசு 5ரூபாவையும் கொடுத்தேன் தற்செயலாக என்னிடம் 10 ரூபா இருந்தபடியால் அதைக் கொடுக்க கூடியதாக இருந்தது: இல்லாதிருருந்தால் என் நிலை அரிசியைத் திருப்பிக் கொண்டு வரும் படியாகியே இருந்திருக்கும்! சட்டம் துப்பாக்கியிலும் பெரிதல்லவோ?

ஆனுல் இதே கோவிலில் புரட்டாசி மாதம் சனிக்கிழமையில் கடலை வியாபாரிகள் முன்கொட்டகை மண்டபத்து அநுமதிக்கப் பட்டனர். சனியனுடன் கடலைக்கொட்டையும் வருவாய் தானே! கடலைக் கொட்டை வியாபரப்பெண்கள காசுடன் ஒன்பத்துறை கட்கும் இடம் கொடுத்த சம்பவம்கள் மருதடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்றதாக வதந்திகள் .உளது நடந்தாலும் வருவாய் வந்தால் போதும் எஃபதே எங்கள் சைவக்கோயிலின் நிலையாகி விட்டது.

## கும்பாபிஷேககும்பம் தூக்க தாமதம்.

பல ஆண்டுகளாக வட்டு மேற்க்கு மாதாங் கோவிலில் வாலஸ்தாபனமாகி கும்பாபிஷேகம் நடைபெற்றுந்தது, இது இப்படி இருக்கும் நேரத்தில் யாரோ ஒரு அன்பர் சிங்கப்பூர் தன வந்தர் பலரிடம் பணம் பெற்று கும்பாபிஷேகத்தை சிறப்புடன் நடத்திட முன் வந்தார் கும்பாபிஷேக நிகழ்சிகள் நடை பெற்று கும்பாபிஷேக தினத்தன்று யாக பூசை பூரண ஆகுதிஎல்லாம் முடித்து கும்பம் தூக்க சில மணி நேரம் தாமதம் செய்ய வேண்டி வந்தது. ஏன் என்ருல் கும்பாபிஷேக தினத்தன்று கௌரவப் பிரமுகராகதிருஞானசம்பந்த மடாதிபதியும் சவுக்கார முதலாளியும் போய் இருந்தனராம். வந்த இருவரையும் கௌரவிக்க அவர்களைச் சிறப்புரை நிகழ்த்த வசதிகள் செய்து கொடுத்தனராம். அதற்காக 1 மணித்தியாலம் வரை பூசை முடித்து கும்பம் தூக்கபடமல் இருந்தது என வட்டு மேற்கைச்சேர்ந்த ஓர் அன்பர் நம்மிடம் கவலை தெரிவித்தார். அவருடன் சேர்ந்தும்நாமும்இத்தகைய பாதகச் செய்கை கட்கு வருத்தம் தெரிவிக்கலா மன்றி வேறு என் செய்ய சொல்ல.

ஏன் எனக் கேட்டால் திருஞானசம்பந்த சுவாமிதமது ஒரு தேவாரத்து முட்டு இன்றி இருபோதும் முனியாது அன்பு பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே'' என்கின்ருர்; கும்பாபிஷேகக் கிரியைகளில் பூசை விதிப்படி வரன் முறையாக ஏதும் முட்டு இடைச் செருகல் நிகழ்ச்சி இல்லாத படி நடக்க வேண்டும்; அதுதான் முட்டில்லாதவழி. இடையில் கிரியைகளை நிறுத்தி பிரசங்கம் சொற்பொழிவு பாராட்டு விமர்சனம் விளக்கம் ஒலிபெருக்கி நிழற்படம் லைற் அடித்தல் இவையாவும் முட்டே. முனிவு என்பது எது என நீங்களே விளங்குங்கள். குருக்கள்மார் இந்த விடயத்தில் பெரும் பிழை விடுகிருர்கள். ஏதும் கேட்டாலும் சில வேளை எரிந்து விழுவார். ஐயோ நான் இதை என் சொல்ல முட்டும் முனிவும் ஆகாது என திருஞானசம்பந்த மடாதிபதிக்கு பாவம் விளங்காது. சவுக்காரம் விளம்பரக்தோடு விளங்குவது அதுக்கும் விளங்காது. இத்தகைய பேதையரே இடையில் பேச விட்டமக்களை நான் என் சொல்ல. அவர் இந்த விசரனுக்கு வேலையில்லையோ? இதையோ எழுதுறது. என என்னைக் குறையாக விளங்குவாரே!

## மருதடியில் பிரதிட்டை செய்ய இடமில்லை.

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தீர்த்தத் திருவிழா அன்று பதினொரு மணியளவில் வீதியால் சென்றேன். உண்மையில் போனதும் எனக்கே பெரும் வேதனையாக இருந்தது ஏன் என்று கேட்டால் வெளிவீதி முழுமையும் கடலைக் கொட்டையாபாரம் விளையாட்டுச்சாமான் யாவாரம் இவ்வளவும் வெளி வீதி முழு இடமும் நடைபெற்றவண்ணமிருந்தன. பிரதிட்டை செய்யும் சில அன்பர் உருண்டு வந்தார். ஐயோ அதுகள் காலை முடுக்கி சில இடத்தில் மிகவும் கஷ்டமுடன் ஒதுங்கிப் போக வேண்டி இருந்தது. வியாபாரிகள் உள்வீதி மதிலின் அருகில் கடை. இங்கால் அவர் எதிரில் கடலை பனங்கட்டி பாய் முட்டாசு சர்வத்து அலுமினியம் பலூன் கோப்பை எல்லாம்

## கோயில் திருவிழா இடையில் நிறுத்தப்பட்டது

கொக்குவில் மேற்கு வாராகி அம்மன் கோவில் திருவிழா 8வது நாளுடன் நிறுத்தப்பட்டது. இதற்கு காரணம் 8ம் திருவிழாவில் ஏற்பட்ட தகராறு என்றே சொல்லப்படுகிறது. அதன் பின் தொடர்ந்து நடைபெற வேண்டிய இரு திருவிழாவும் செய்யாமல் விடப்பட்டது. கோவில்காரர் பேரில் உள்ள ஒருவருக்கு அடிவிழுந்தது தான் அத்தகைய நிறுத்தற்குக் காரணம்.

அதன் வரலாறு பற்றி விசாரித்ததில் 8ம் திருவிழாக்காரர் திருவிழா நிகழ்சிகளில் ஒன்ருக கூத்தும் வைத்தனராம் சுவாமி 12 மணிக்கு பூசையாகி வெளிவீதிவந்ததாம் மூன்று கூடுகளுடைய சப்பரமாம் அன்று சுவாமிகளைக் காவ கூலிக்கு பிடிக்கபட்டதாம். மூன்று கூட்டுச்சப்பரத்தில் மூன்று சுவாமியும் வெளிவலம் வந்து வட கிழக்கு மூலையில் நிறுத்தப்பட்டு கூத்து மேடையில் கூத்து நடந்ததாம்.

முன் கூட்டியே திருவிழாக்காரர் கூத்து முடியும் வரை சுவாமியை இறக்காமல் வைத்திருக்கும் படி வேண்டிக் கொள்ள அதற்கு கோவில் நிர்வாகம் இணங்கியதாம் ஆனுல் இடையில் மறுநாள் வருடப் பிறப்பு என்ற சாட்டில் சுவாமியை வடகிழக்கு மூலையில் சப்பறத்தில் இருந்த படியே ஒவ்வொன்ருக தூக்கி உள்ளுக்கு நிர்வாகம் கொண்டு போனதாம், சப்பறத்துடன் சுவாமி வாய் தலுக்கு வரவில்லையாம். சுவாமியை அதில் வைத்து இறக்கிபாத தீர்த்தம் கொடுக்கவில்லையாம் தீர்தமும் கொடுக்காமல் சப்பறத்தையும் வாய்தலுக்கு கொண்டு வராமல் சுவாமியை வடகிழக்கு மூலையில் வைத்து வஞ்சனை நோக்குடன் நிர்வாகம் இறக்கியது என திருவிழாக்காறர் வெறுப்புற்று கோவில் நிர்வாகத்துடன் வாதிட்டனராம். வாதாட்டத்தில் கோவில் நிர்வாகத்தின் பேரில் பேசிய ஒருவர் அடிவாங்கிக் கொண்டார். அதனுல் வேதனைப்பட்ட முதலாளி கோவில் திருவிழாவை நிறுத்திக்கொண்டாராம். அவர் கொள்கை தமக்காகப் பேசியவருக்கு அடித்தமைக்கு எதும் அம்மன் காட்டினுல் தான் இனிமேல் திருவிழாச் செய்வாராம். இந்த நிலையில் வராகி பாடு தர்மசங்கடமாகிறது, வராகி ஆருக்காகக் காட்டுறது. அடித்தவர் தனக்கு திருவிழாச் செய்பவர் தன்னை கும்பிடுபவர். நிர்வாகி தன் கோவிலைத் தனது என்று சொல்பவர். யாருக்கு அம்மன் காட்டுறது. என்னத்தை அம்மன் காட்டுறது. இந்தக் கோவில் சமீப காலத்து கும்பாபிசேகம் நடந்தது. இதனை மனி ஐயர் என்று சொல்லப்படும் நல்லூர் ஆதின வித்துவான் பரம ஆச்சாரியர் புங்குடுதீவில் வைத்து பிரதிட்டா இரத்தினம் என பட்டங் கொடுத்துப் பாராட்டிய குகதாசக் குருக்கள் நடத்தியவர். இத்தகைய சிறுமைப்படும் பேதைத் தன்மையும் என்று தான் எம் கோவில்களை விட்டு நீங்குமோ?தெய்வம் தீங்குசெய்தல் சைவத்தில் இல்லை.

## திருக்கேதீஸ்வரத்தில் திருமஞ்சனமாட்ட ரூபா2.

திருக்கேதீஸ்வரத்தில் மண்ணுல் முடுண்டிருந்து பின்னர் கண்டெடுக்கப் பட்ட பின்னப்பட்ட ஒரு சிவலிங்கம் கோயில் பின்னுல் தாபிக்கப்பட்டு அன்பர்கள் அதற்கு நீர் சுமந்து வந்து நீராட்ட ஒரு குடத்திற்கு ரூபா 2 வசூலிக்கிருர்கள். இதை விட வியாபாரம் வேறு யாது? சிவதன்மம் உரைத்த பெருமார்க்கு செய்யும் சிறப்பு இதுதானே.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை, நல்லையா அவர்களால் புனிதவளவன் கத்தோக்க அச்சகத்வ் பிரதி பண்ணப்பட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org